
www.padippakam.com

Nr. 258

# காகம்

Kakam



CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

(2) Februar 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்
நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## முகம்



### அடையாளம்

இவளை நீங்கள் சென்றமாத "காகம்" இதழில் சந்தித்திருப்பீர்கள்.
இவள் எமது ஈழத்துச்சகோதரி.
யாழ். சென்றிருந்த ஒரு டனிஸ் பத்திரிகையாளரின் புகைப்படப்பெட்டிக்குள் அகப்பட்டு வந்து பின்னர் ஓவியர் செல்லமாறனால் ஓவியமானவள்.
இவள் வாழும் நெடுந்தொலைவு தாயகத்தை நாம் வந்தபோது உள்ளநிலையிலேயே இப்போதும் எண்ணிப்பார்க்கின்ற நிலையிலே நாம் உள்ளோம்.நவீனத்துவ தொலைத்தொடர்பு சாதனவீச்சையும் கடந்துதானோ எமது தாயகமும் உள்ளது என எண்ணுமளவுக்கு இந்தச்சின்ன உலகம் பேதங்களினால் பிரிந்துபோயிருக்கிறது. வருத்தம்தான்.
இவளை எங்களால் மறக்கமுடியாதிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கடிதங்களாலேயே பாலம் அமைத்துக்கொண்டும், ஒருவருக்கொருவர் பலதை மறைத்துக் கொண்டும்தான்.....எமது உறவுகளுடன் இந்தப் பாலம் அமைந்திருக்கின்றது. இந்தப் பொய்மைகள் தொடரவேண்டாம். தொடரவும் முடியாது.என்றோ எங்கோ சந்திக்கப்போகின்றவர்கள் நாம். 60களின் பின் எழுந்து மறைந்த அந்த வெளிநாட்டுத்தமிழர்கள் பற்றிய மாய எண்ண அலையில் சற்று மாற்றம் தெரிகிறது. இந்த உண்மை பலருக்கும் தெரிந்த ஒன்று. ஆகவே பொய்யான இடத்திலிருந்து விலகுவோம்.நாம் ஒன்றாக வாழவேண்டிய காலம் வரும்.அதை நிச்சயமாக நம்புவோம். இந்த உண்மையை நம்புவோமானால் பரஸ்பரம் எமது தாயகத்துடனான உறவுகளை ஆரோக்கியமானதாகவும், ஆழமானதாகவும் ஆக்கிக்கொள்வோம்.

புலம்பெயர்ந்து நாம் வாழும்நாடுகளில் பிறவற்றைத்தவிர பொருளாதாரத்தில் குறைவற்றநிலையில் வாழ்வதை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ளவேண்டுமானால் இன்று தாயகத்திலுள்ள பொருளாதாரத்தேவையினை சீர்செய்ய நாம் உதவுதல்வேண்டும்.

அத்தகைய உதவி என்பது பொருளாதார மேம்பாட்டுக்கான அன்றேல் வாழ்வியக்கத்திற்கான நீண்டகாலப்பார்வையுடையதான உதவியாக அமைதல்வேண்டும்.

இன்று சில நாடுகளில் இத்தகைய முன்னெடுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவை பாராட்டுக்குரியவை.

காலதாமதமின்றி ஒவ்வொரு ஈழத்து பிரசையும் புலம்பெயர் நாடுகளில் இத்தகைய தூரநோக்குடைய சமூக, பொருளாதார உதவித்திட்டங்களை மேற்கொள்ள ஆவனசெய்தல்வேண்டும். இத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளும்போது காகம் தன்னாலான பங்களிப்பை செய்யும்.

ஈழத்துச்சிறுமி ஒருத்தி ஒரு அட்டைப் படத்துக்காக பிறந்தவளல்ல.

அவள் வாழவும் வேண்டும்.

உள்ளே.................

| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 7 | ஆதவனின்பார்வையில்சினிமா |
| 10 | மறுபக்கம் –சிறுகதை |
| 12 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 14 | மனதோடுபேசுதல் |
| 17 | நல்லகாலம்எப்போதுவரும் |
| 22 | இளைஞர் பக்கம் |
| 24 | கவிதைகள் |
| 25 | ஐரோப்பாவும் தமிழ்மொழியும் |
| 27 | தோப்புக்கரணங்கள் |
| 30 | பொதுவிபரங்கள் |

அன்புடன்..........
உங்களுக்குத்தெரிந்த ஒரு நல்ல வாசகரை அறிமுகம் செய்து உதவுங்கள்.

காகம்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark.
TIF: 42 28 90 12



படிப்பகம்

# H.C.ANDERSENனின் கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்

## தீக்குச்சிகளுடன் ஒரு சிறுமி



**Andersen Hans Christian**, *(2.4.1805 – 4.8.1875 ) .ஐரோப்பிய இலக்கிய உலகில் 1800 களின் தலைசிறந்த கவிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். கவிதைகள், கற்பனைக்கதைகள், கதைகள்,பயணஅனுபவங்கள், வாழ்க்கைக்குறிப்புகள், என தனது இலக்கியங்கள் மூலமாக எழுத்துலகில்பிரகாசித்தவர். பிறப்பால் இவர் ஒரு டனிஸ் சமூகத்தவராக இருந்தாலும்: இவரது படைப்புக்கள் உலகின்125மொழிகளில்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.தமிழில்......?*

கொடூரமான குளிரில் பனி கொட்டிய வண்ணமிருந்தது. ஃநீண்டஇரவுகளைக்கொண்ட வருடத்தின் கடைசி இரவு, ஆம் புது வருடஇரவு. இந்தக்குளிரிலும், இரவிலும் அந்த ஏழைச்சிறுமி வெறுந்தலையுடன் காலணிகள் எதுவுமின்றி நின்றாள்.அவள் வீட்டிலிருந்து வரும்போது அணிந்திருந்த காலணிகள் பெரிதாக இருந்ததனால் குளிரைத்தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவளுடைய தாயார் இறுதியாகப் பாவித்த பெரியசெருப்புக்களே அவை.வீதியில் அவள் நடந்துசென்றுகொண்டிருக்கும்போது எதிரெதிரே வேகமாக வந்துகொண்டிருந்த வாகனங்களைக்கண்டு அவள் ஓடியபோது அவைகளை அவள் இழந்துவிட்டாள்.அவற்றில் ஒன்று எவ்விடம் போனதென்றே அவளுக்குத்தெரியவில்லை.மற்றைய ஒன்றை ஒருபையன் எடுத்து தனக்கு பிள்ளை பிறக்கும்போது ஊஞ்சல் கட்டுவதற்கு அதனைப்பயன்படுத்தப்போவதாக கூறிக்கொண்டு அதனைக்கொண்டு ஓடிவிட்டான்.

அந்தச்சிறுமியின் பிஞ்சுப்பாதங்களில் ஒன்றுமில்லாதபடி நடந்துசெல்ல.....பாதம் சிவந்து கருநீலமாகிவிட்டது. தனது பழைய உடைகளுக்குள் நிறைய தீக்குச்சிகளும், கையில்ஒருபிடி தீக்குச்சிகளுமாய்அவள்சென்றாள்.

அடிக்குறிப்பு: மார்கழிமாதத்தில் இருள்வேளை நீண்டதாகவும்ஒளிவேளை குறைந்தும் காணப்படும். இக்காலத்திலேயே கிறிஸ்மஸ் நாட்களாகவும் கொண்டாடப்படுகின்றது. புதுவருட இரவிரிலிருந்துமீண்டும் நீண்டஒளிநாட்கள் ஆரம்பிக்கின்றது.

யாருமே அவற்றை வாங்கவில்லை, ஒருவர் கூட ஒரு சல்லிக்காசுகூட கொடுக்கவில்லை. குளிரின் கொடுமையில் பசியுடனும், திகிலுடனும் அந்தஏழைச்சிறுமி திரிந்தாள். பனித்துகள்கள் அவளின் நீண்ட மஞ்சள்நிற கூந்தலில்விழுந்து கழுத்தைச்சுற்றியிருந்து அவளுக்கு அழகூட்டியது.

ஆனால் அவள் அதைப்பற்றி சிந்திக்கவில்லை. எல்லாவீட்டு ஜன்னல்வழியாகவும் விளக்குவெளிச்சங்கள் பளிச்சிட்டவண்ணம் இருந்தது. அந்தவீதியெங்கும் வாத்துச் சமையல்வாசனை மூக்கைத்துளைத்தது. ஆம் அன்று புதுவருட இரவு என்பது நினைவுக்கு வந்தது அவளுக்கு.

வீதியிலிருந்த இருவீடுகளில்; வீதியை நோக்கியபடி இருக்கும் வீட்டின் ஒருபுறமூலை

www.padippakam.com

யில் அமர்ந்துகொண்டாள். குளிரின் கொடுமை தாங்கமுடியாமல் தன்னுடையபாதங்களை சிறிது மேலே தூக்கினாள். ஆனால் அது இன்னும் வேதனையாக இருந்தது. அவள் இதுவரை எந்ததீக்குச்சிகளையும் விற்றிருக்கவில்லை. ஒரு சல்லிக்காசுகூட இல்லாமல் வீட்டுக்குப் போகப்பயப்பட்டாள்.

ஏனென்றால் அவளுடைய தந்தைஅடித்துவிடுவான். வீட்டிலும் குளிர்தான்.அவர்கள்வீட்டில் கூரைமட்டும்தான் இருந்தது.தோட்டத்திலிருந்தெடுக்கப்பட்ட செடிகளால்தான் அவர்கள்வீடு வேயப்பட்டிருந்தது.வீட்டினுள் குளிர் சில்லென்று வீசியவண்ணமிருக்கும்.

அவளுடைய அந்தச்சின்னக்கைகள் குளிரினால் இப்போது இறந்துவிட்டன. ஒரு தீக்குச்சியென்றால் நன்றாய் இருக்கும்! கையில் இருக்கும் தீக்குச்சிக்கட்டிலிருந்து ஒன்றையெடுத்து சுவரில்தேய்த்து மூட்டி கைகளை வெப்பமாக்கிக்கொண்டாள். அந்தத்தீக்குச்சி ஒரு சிறுவிளக்கு எரிவதுபோல எரிந்து வெப்பத்தைக் கொடுத்தவண்ணமிருந்தது.

அவளின் நினைவு; அவள் ஒரு வெப்பத்தைக் கொடுக்கும் அடுப்புக்குமுன்னால் இருப்பதுபோன்றிருந்தது. அவள் தனது குளிர்ந்த பாதங்களை எடுத்து வெப்பத்தில் வைத்தபோது நெருப்பு அணைந்தது.அந்த அடுப்பை காணவில்லை. கையில் எரிந்துமுடிந்த தீக்குச்சி மட்டுமே இருந்தது.

அவள் மீண்டும் ஒரு தீக்குச்சியை மூட்டினாள்.அது சுவரில் பளபளப்புடன் எரிந்துகொண்டிருந்தது. அவளுடைய கண்ணிற்குள் ஒருவீட்டில்; மேசைகள் அலங்கரிக்கப்பட்டு அழகான மேசைவிரிப்புக்கள் விரிக்கப்பட்டு, சாப்பிடும்கோப்பைகள் வைக்கப்பட்டிருந்தன. சிவஸ்கவும், (ஒருவகைப்பழம்) அப்பிளும் சேர்த்து சுவையாக சமைத்த வாத்தும் வாசனையைத்தந்தது.தட்டில் இருந்த வாத்து முதுகில் கத்தியையும், முள்ளுக்கரண்டியையும் தாங்கி நிலத்தில் விழுந்தது.

ஆம்......அந்த ஏழைச்சிறுமிக்கு அருகில் வந்து அது விழவும், தீக்குச்சி அணையவும் சரியாக இருந்தது.இருளில் அந்தச்சுவர்கள் மட்டுமே பார்க்கக்கூடியதாக இருந்தது. அவள் இன்னுமொரு தீக்குச்சியை மூட்டினாள். அழகான ஒரு கிறிஸ்மஸ் மரத்தின்கீழ் இருப்பதுபோல் இருந்தது.கடந்தவருட நத்தார் தினத்தன்று தான் ஜன்னல் வழியாக பார்த்த அந்த பணக்காரக் கடைக்காரன் வீட்டிலிருந்த ஆயிரக்கணக்கான விளக்குகளையும், சுவரில் இருந்த வர்ணங்களையும்விட இந்த கிறிஸ்மஸ் மரம் பெரிதாகவும், அழகாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனந்தத்தால் கைகளை காற்றிலே வீசினாள். தீக்குச்சி அணைந்தது. அந்த நத்தார்விளக்குகள் உயர உயர சென்றது. அவைகள் நட்சத்திரங்களாயின.

அவற்றில் ஒன்று கீழேவிழுந்து வானத்தில் ஒரு நெருப்புக்கனலை ஏற்படுத்தியது. "ஒருவர் இறக்கப்போகின்றார்" என்றாள் சிறுமி.அவளில் அன்பாக இருந்த பாட்டி கூறியகதை...."ஒருநட்சத்திரம் விழும்போது ஒரு ஆத்மா ஆண்டவரிடம் சென்றடையும்"

அவள் மீண்டும் ஒரு தீக்குச்சியை மூட்டினாள்.அது அவளைச்சுற்றி வெளிச்சம் கொடுத்தது. அவளுடைய பாட்டி பளபளப்பாக தெளிவாகத்தோன்றினாள்.

"பாட்டி என்னையும் உன்னுடன் அழைத்துச்செல் " என்று சிறுமி கத்தினாள். "எனக்குத் தெரியும் நீ நெருப்புத்தந்த அடுப்புப் போல், காலடியில் இருந்த வாத்துப்போல், கிறிஸ்மஸ்மரத்தைப்போல் நீயும் அணைய நீயும் அணைந்துவிடுவாய்" என்றுகூறி கையில் இருந்த எல்லாத்தீக்குச்சிகளையும் மூட்டினாள்.இவ்வாறு செய்வதன்மூலம் பாட்டி தன்னைவிட்டுப் போய்விடமாட்டாள் என்று எண்ணினாள். அந்தவெளிச்சத்தில் பாட்டி அழகாகவும், பெரிதாகவும் இருந்தாள்.அந்தச் சிறுமியின் கையைப்பிடித்து தூக்கிக்கொண்டு உயரஉயர பறந்தாள்.

அங்கே குளிரில்லை, பசியில்லை, பயமில்லை. அவர்கள் கடவுளிடம் சேர்ந்துவிட்டார்கள்.

மறுநாட்காலை அவள் இருந்த இடத்தில் சிரித்தமுகத்துடன் குளிரினால் கடந்த வருடத்தின் கடைசி இரவில் இறந்த அந்த சிறுமியின்உடல் காணப்பட்டது.

புதுவருடக்காலையில் சூரிய வெளிச்சம் உடலில்பட அவளின்கையில் எரிந்த தீக்குச்சிகள் தெரிந்தன.

அவள் தனக்கு வெப்பத்தை ஏற்படுத்துவதற்காக அவற்றை கொழுத்தியிருக்கலாமென வழிப்போக்கர்கள் கதைத்தனர்.

அவள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் பிறந்திருக்கும் புதுவருடத்தில் தன்னுடைய பாட்டியுடன் சென்றுவிட்டாள் என்று யாருக்குமே தெரிந்திருக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# ஆதவனின் பார்வையில்

"சினிமா" என்ற சொல் ஆங்கிலேயர் வந்தது முதற்கொண்டு தமிழ்ச் சொல்லாகி வழங்கி வருகிறது."CINEMA" என்ற சொல்லுக்கு அர்த்தம்தேடி ஆங்கிலத்தமிழ் அகராதியைப் புரட்டினேன். முதலாவது அர்த்தம் "சினிமாப்படக்காட்சி"என்றிருந்தது."சினிமா"வைத் தமிழ்ச் சமூகம் மேலைநாட்டிடம் இருந்துதான் கடன் வாங்கியிருக்கிறது.
ஒருகாலத்தில் தொழில்நுட்பங்கள் மேற்கிலிருந்தே இங்கு வந்தன. இங்கு என்பது கீழைநாடுகளை குறிக்கும். தொழில்நுட்பங்களோடு அவர்களது கலாச்சாரமும் வந்துசேர்ந்தன.
பின்னர் தொழில்நுட்பங்களைவிடுத்து அவர்களது கலாச்சாரமே இவர்களது தொழில்நுட்பங்களாய் மாறிப்போயிற்று.

" அவர்கள் எங்களிடம் வரும்பொழுது
நாங்கள் நிலத்தை வைத்திருந்தோம்.
அவர்கள் பைபிளை வைத்திருந்தார்கள்.
அவர்கள் எங்களைப் பிரியும்பொழுது
நாங்கள் பைபிளை வைத்திருக்கிறோம்.
அவர்கள் நிலத்தை வைத்திருக்கிறார்கள். என்ற மூன்றாம் உலகப் பழமொழி நினைவுக்கு வருகிறது.தொழில்நுட்பம் மட்டும்தான் சினிமா என்றால் அது எவ்வாறு கலை ஆகிறது? மேலைத்தேய கலாச்சாரம்தான் சினிமா என்றால் அதுவும் எவ்வாறு கலை ஆகிறது? சினிமாவை கலை என்று அங்கீகரிக்கமுடியுமா?
இங்கே நிறையப்பிரச்சினைகள் எழுகின்றன.

1. மேலைநாடு கீழைநாடு
2. தொழில்நுட்பம் கலாச்சாரம்
3. மூன்றாம் உலகநாடு
4 கலை
5. கலாச்சார ஊடுருவல்

இப்படிப்பல..................

∴ ∴ ∴ ∴ ∴ ∴

இந்தக் கட்டுரைத்தொடரில் நான் எந்த ஒழுங்குமுறையையும் கடைப்பிடிக்கப்போவதில்லை. கடைப்பிடிக்கவும் என்னால் முடியவில்லை.எனது சமூகப்பொறுப்புணர்வு பற்றிய கட்டுரையாகவோ....அல்லது எனக்கான ஒரு அங்கீகாரத்தை வேண்டிநிற்கும் கட்டுரையாகவோ....அல்லது சில நியதிகளை நிறுத்தி, அதற்கான அடித்தளங்களை செப்பனிடுகின்ற கட்டுரையாகவோ – இதனை நான் எழுதவில்லை.நான் லட்சக்கணக்கான திரைப்பட – தொலைக்காட்சிகளைப் பார்த்தவன் என்றமுறையிலும் பல சினிமாக்கலைஞர்களுடன் பழகியவன் என்ற முறையிலும் எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள



படிப்பகம்

www.padippakam.com

முனைகிறேன்.

நான் இத்தொடரில் எழுதும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் யாரும் எந்தவேளையிலும் என்னுடன் தொடர்புகொண்டு விடயங்களை பரிமாறிக்கொள்ளலாம்.. இன்னும் ஒருவிடயத்தை கட்டாயம் நான் சொல்லவேண்டும். இந்தக்கட்டுரைத்தொடர் எந்தத்தரத்திலிருப்பவர்களுக்கு என்றும் எனக்குத் தெரியாது. நான் கூடியவரையில் " வாசகர்களுக்கு ஒன்றும் தெரியாது" என்ற நினைப்பிலேயே இதை எழுதமுற்படுகின்றேன்.இந்தநினைப்பிற்காக வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

∴ ∴ ∴ ∴ ∴

முதலில் நான் இப்படி ஆரம்பிக்கிறேன்.

"FLASH BACK" என்றால் என்ன?

ஒளிவீச்சை பின்னால் திருப்புவது என்று அர்த்தம் கொள்ளலாமா?

ஒளிவீச்சை பின்னால் திருப்பினால்–பின்னுக்குள்ள விடயங்கள்மட்டும் தெரியும்.

ஒரு பூப்புனித நீராட்டுவிழாவுக்கு வீடியோ எடுக்கச்சென்ற ஒருவர் தனது FLASH LIGHT பிடிப்பதற்காக ஒரு உதவியாளருடன் சென்றார். அங்கே பெண்ணைப் படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். FLASH LIGHT பெண்ணின் முகத்தை நோக்கி ஒளிவீசியது.அந்தச்சமயத்தில் முக்கிய பிரமுகர் ஒருவர் மண்டபத்தினுள் நுளைந்தார். இதை அவதானித்த படப்பிடிப்பாளர், பிரமுகரை படம் எடுக்கும்நோக்குடன் உதவியாளரை நோக்கி "FLASH BACK" என்றார்.

நான் உடனே சிரித்துவிட்டேன். ஏன் நான் சிரித்தேன் என்று பலருக்கு விளங்கவில்லை.

சினிமாவில், திரைப்படத்தில், தொலைக்காட்சியில் "FLASH BACK" என்ற பிரயோகம் காலத்தைக்குறிப்பது. காலத்தினால் பின்நோக்கிய காட்சிகளை விவரிக்க அந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்தப்பிரமுகரோ மீசைநரைத்த 45 வயதுக்காரர். அவரது இளமைக்காலத்தில் அவர் இந்தப் பெண்போல் இருந்திருப்பாரா?

இருந்திருக்கிறார் ..........என்பதுதான் "FLASH BACK" என்ற சொல்லின் அர்த்தம்.

ஒவ்வொரு தொழிலுக்கும், துறைக்கும் சில கலைச்சொற்கள் இருப்பதுபோல "சினிமா" வுக்கும் இருக்கிறது."சினிமா" விற்கென ஒரு ஒரு மொழி இருக்கிறது. மொழி என்பதை நீங்கள் தொடர்பு சாதனம் என ஒத்துக்கொண்டால் "சினிமா" வையும் ஒரு தொடர்பு சாதனம் என ஒத்துக்கொள்ளவேண்டும். இந்தச்சாதனத்தின் மகத்துவங்களையும், மலட்டுத்தன்மைகளையும் நீங்கள் புரியவேண்டுமாயின் அந்த"மொழி"யை பயிலவேண்டும். சினிமாவின் "மொழி" உணர்வை அடிப்படையாகக்கொண்டது. குறிப்பாக கண்களினால் பெறும் அறிவின் உணர்ச்சி அது.

கண்கள் இல்லையெனில் சினிமாவும் இல்லை.கண்களில் "LENSE"(பூதக்கண்ணாடி )இருந்தால்தான் இமைகளுக்கு அர்த்தம் கிடைக்கும். "லென்ஸ்" இல்லாத கண்களைப் பாதுகாத்து என்ன பயன்? "CAMERA" என்ற சாதனத்திற்கும் LENSE வேண்டும். இந்தப் பூதக்கண்ணாடியும் அந்தப்பூதக் கண்ணாடியும் பரஸ்பரம் ஒரு ஐக்கியத்திற்கு வரும்பொழுதுதான் சினிமா சாத்தியமாகிறது. சினிமாவின் மொழி என்பது காட்சி மயப்பட்டது

∴ ∴ ∴ ∴ ∴

லண்டனில் இருந்து வெளிவரும் FRAMEWORK என்ற சினிமா ஆண்டுச்சஞ்சிகை 1989 ம் ஆண்டில் "SRILANKAN CINEMA" வுக்குத் தனது முழுப்பக்கங்களையும் அர்ப்பணித்தது. அதில் "நட்சத்திரமும் நடிகையும்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளிவந்த அனோஜா வீரசிங்க என்ற புகழ்பெற்ற சிங்கள நடிகையின் பேட்டியின் சில பகுதிகளை இங்கே தருகின்றேன். பேட்டியின் முழுப்பகுதியும் வேண்டுவோர் என்னிடமோ "காகத்" திடமோ தொடர்பு கொள்க.

இதுகுறித்து எனக்கு உதவிபுரிந்த என்துணைவி மல்லீஸ்வரிக்கு என்றும் என் நன்றிகள்.

(மீண்டும் அடுத்த காகத்தில்)

................பேட்டி மறுபக்கத்தில்...........



படிப்பகம்

www.padippakam.com

## நட்சத்திரமும் நடிகையும்

..பிரபல சிங்களநடிகை **அனோஜா வீரசிங்கவின்**பேட்டி
.......சிங்களத்திலிருந்து ஆங்கிலம்: சுனிலா அபயசேகரா
.........தமிழில்: ஆதவனும் மல்லீஸ்வரியும்.........................

.........1978 ம் ஆண்டு தனது டீனேஜ் காலத்திலிருந்து இன்றுவரை இவர் நடித்துவருகிறார்.இவர் புகழ்பெற்ற பிரபலமான சினிமா அந்தஸ்தான "நட்சத்திர" அந்தஸ்த்தைப்பெற்றிருப்பதுடன், இலங்கையில் சமூகயதார்த்தத்துக்கான திரைப்படங்களையும், தொலைக்காட்சிப்படங்களையும் உருவாக்கிய தரமான நடிகை என்ற அந்தஸ்த்தையும் பெற்றவர். திரைப்படம், தொலைக்காட்சி உள்ளடக்கிய 22 விருதுகளை இவர் பெற்றிருக்கிறார். அவ்விருதுகளுள் 1987ம் ஆண்டு நியுடெல்லியில் நடைபெற்ற திரைப்படவிழாவில் சிறந்தநடிகைக்கான "வெள்ளிமயில்" பரிசும், அதே ஆண்டில் ஜனாதிபதி பரிசும்,1988ல் "உயர்ந்த பத்து ஆளுமைகள்" என்ற பரிசும் பெற்றவர்.பாகிஸ்தானிலும், தென்னிந்தியாவிலும் உருவாக்கிய படங்களில் இவர் நடித்துள்ளார்.
POUL COX இன் திரைப்படமாகிய "THE ISLAND" இல் பிரபல மேலைத்தேய நடிகையான IRENE PAPAS உடன் பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார்.இப்பொழுது LONDON ACADAMY OF MUSIC AND DRAMATIC ART" இல் படித்துவருகிறார்.

கேள்வி: எவ்வளவு காலமாக நீங்கள் நடித்து வருகிறீர்கள்?
பதில்: 10 வருடங்களாக நடிக்கிறேன்.இந்தக்காலகட்டத்தில் நான் "மல்தெனிய சைமன்"(D.B. நிஹால்சிங்க1986) "சுரபிதென" (சந்திரரட்ன மபிதகம), "ஸ்ரீ மதுர" (பராக்கிரம நிரில) ஆகிய அவை மூன்றும்தான் கலைப்படங்கள். ஏனையவை வியாபாரப்படங்கள். பெரும்பாலும் தென்னிந்தியப் படங்கள்போல்தான் இருந்தன.திரைப்படத்துறைக்கு நான் இன்னும் போதிய பங்களிப்பு செய்யவில்லை என்றே நினைக்கிறேன்.எதிர்காலத்தில் நிறைய செய்யவேண்டுமென்னும் எதிர்பார்ப்புடன் இருக்கிறேன். ஆனால் மேற்குறிப்பிட்ட 3 படங்களுக்கூடாகவும் நான் நடிகை என்ற அந்தஸ்த்தைப் பெற்றுள்ளேன். டெல்லியில் சிறந்த நடிகைக்கான விருதை எனது நடிப்புக்காக வழங்கினார்கள்.இதில் நான் 2 பாத்திரங்களை ஏற்று நடித்தேன்.இந்த 2 பெண்பாத்திரங்களும் இப்போது நாம் வாழுகின்ற சமூகநியதியினால் ஒதுக்கப்கட்டவர்கள் அல்லது வழுக்கி விழுந்தவர்கள். அதாவது இருபெண்களும் சமூகச்சூழலின் பலிக்கடாக்கள். அவர்களை அப்படி வாழப்பண்ணியமைக்கு சமூகமே பொறுப்பு."ஸ்ரீமதுர" என்ற படத்திலும் நான் இத்தகைய ஒரு பாத்திரத்தையே ஏற்றேன். இதில் வருகின்ற லீலா என்றபெண் "அங்கீகரிக்கப்பட்ட பிற்போக்கு சமூகநியதியினால் வேறுவிதமான ஒரு வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள். இந்தப் பெண்பாத்திரங்கள் யாவுமே பாலியல் சுரண்டலுக்கு பலியானவர்கள்.
"சுரபிதென" என்ற படத்தில் ஏழைத்தொழிலாளி ஒருவரின் மனைவியாகவும் 4 பிள்ளைகளுக்கு தாயாகவும் நான் நடித்தேன். எனது கணவர் தொழிலாளியாக வேலை செய்யும் எஸ்டேட் முதலாளிக்குப் பிள்ளைகள் இல்லை. அந்த முதலாளிக்கு ஒரு பிள்ளை வேண்டும்.ஆனால் அது அவருடைய இரத்தத்திலேயேவேண்டும்.இதனால் அவர் தத்தெடுக்க விரும்பவில்லை. அவர் தனது மனைவியை விவாகரத்துசெய்யவோ அல்லது வேறுபெண்ணை மணக்கவோ விரும்பவில்லை. ஏனெனில் அவர் அளவுக்கதிகமாக தனது மனைவியை நேசிக்கிறார்.இறுதியில் தொழிலாளியின் மனைவியாகிய எனக்கூடாக ஒரு பிள்ளை பெறுவதாக முடிவாயிற்று. இந்தப்பாத்திரப்படைப்பின் தன்மையில் முதலில் நான் மறுக்கவேண்டும்.பின்னர் கணவனின் வேண்டுதலாலும் தூண்டுதலாலும் பொருளாதார நிர்ப்பந்தங்களாலும் எனது மனம் மாறவேண்டும். அவள் கர்ப்பவதியாகிறாள். பிள்ளை பிறந்தவுடன் எனது தாய்மை உணர்ச்சியினால் பிள்ளையை தரமுடியாது என்று சொல்லவேண்டும். அவள் தனது கணவனுக்கு எதிராகமட்டுமல்ல முழு உலகத்துக்கு எதிராகவுமே அந்தக்குழந்தையைக் காப்பாற்றப் போராடுகிறாள். இறுதியில் அவள் கொலை செய்யப்படுகிறாள். நான் நினைக்கிறேன் அந்தப்பாத்திரத்தில் எனது நடிப்பு எனக்கு மிகவும் திருப்தியளிக்கிறது.
............வளரும்............

## சிறுபிள்ளைவேளாண்மை.......................................

மழலைகள் பேசி மணல்வீடு கட்டி
மண்பாலம் போட்டோம் அந்நாளிலே—நாங்கள்
மண்பாலம் போட்டோம் அந்நாளிலே!—அந்த
மணல்வீட்டு வாசலில் மணமக்களாக
மலர்மாலை சூட்டினோம் அந்நாளிலே (மழலைகள்)
அப்பா நான் அம்மா நீ என்றாகினோம் —அதில்
தப்பேதும் காணாமல் விளையாடினோம்!
மரப்பாவை ஒன்றையெம் மகளாக்கினோம்—அதை
மணல்வீட்டு தொட்டிலில்தாலாட்டினோம்(மழலைகள்)
கடற்சிப்பி ஒன்றையெம் கலமாக்கினோம்—அதில்
கல்லையும் நீரையும் சோறாக்கினோம்!
உணவுண்ட களைதீர இளைப்பாறினோம்—இந்த
உலகத்தில் இல்லாத சுகமாகினோம்! (மழலைகள்)
மணல்வீடும் தொட்டிலும் மண்பாலமும்—நெஞ்சில்
வாடாத மலர்மாலை மரப்பாவையும்
வீடெங்கும் சேராத வேளாண்மையோ—எங்கள்
விளையாட்டுக் கல்யாணம் வீணானதோ(மழலைகள்)

**........கவிஞர் பாரதிபாலனின்......"கவிதைக்கனவுகள்" (1990) நூலில் இருந்து........**



படிப்பகம்

www.padippakam.com

# மறுபக்கம்

ரவி

இன்று சுந்தரம் தம்பதிகளின் மகனின் முதலாவது பிறந்தநாள். நகரத்தின் சுற்றுப் புறமாக அமைந்த அந்த மண்டபம் நமது நாட்டு அலங்காரப்பொருட்களாலும் டெனிஷ்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கார்களில் வந்து இறங்குபவர்கள், பட்டுச் சாரிகளுடன் வந்து இறங்கி குளிர் தாங்காமல் மண்டபத்துள் அவசரமாக நுழையும் பெண்கள், வெளியே கூட்டம் கூட்டமாக நின்று கதைக்கும் ஆண்கள், சமையலறையில் ஓடியாடி வேலைசெய்யும் சிலஆண்கள் என்று மண்டபம் உள்ளும் வெளியும் ஒரேபரபரப்பாக இருந்தது. அதிகமான பிள்ளைகள் காலநிலைக்கு ஏற்றவாறமையாத உடைகள், பாதணிகளுடன் வெளியே விளையாடுவதும் குளிரால் உள்ளே ஓடிவருவதுமாக இருந்தார்கள்.

வெளியேயும், உள்ளேயும் எல்லோரும் சுந்தரத்தின் குடும்பத்தினர் வருகிறார்களா என்று பார்த்துப்பார்த்து சலிப்படைகின்றனர். பிறந்தாள் கொண்டாட வேண்டிய நேரம் ஒரு சில மணித்தியாலங்களால் தாமதமாகியிருந்தது.

ஒருவாறாக சுந்தரத்தின் குடும்பத்தினர் காரில் வந்து இறங்கிக்கொண்டார்கள். வீடியோகாரரின் கார் வர சிறிதுநேரம் தாமதமானதால் சுந்தரம் குடும்பத்தினர் மீண்டும் காரில் ஏறி இறங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று; வீடியோவிற்காக. வீடியோ முன்னால் படம்பிடித்துக் கொண்டு செல்ல பின்னால் சுந்தரம் குடும்பம் மண்டபத்தின் முன் பக்கத்தை அடைந்தனர். அங்கே வைக்கப்பட்டிருந்த மேசைக்கு பின்னால் நின்று கொண்டனர். மேசையில் இலங்கை வரைபடவடிவில் செய்யப்பட்ட கேக் உயர்த்தி வைக்கப் படவும் அதைச்சுற்றி அப்பிள் முதல் சகல தமிழ்ப்பலகாரவகைகள் வரை தட்டுகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

மேசைக்கு முன்னால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடத்தில் மூன்றுவீடியோ கமராக்களும் இடம் பிடித்துக் கொள்ள அங்கே நடப்பது என்னவென்பது அநேகருக்கு பார்க்கமுடியவில்லை. பார்க்க முடியாதவர்களில் சிலர் வீடியோ படப் பிடிப்பின் உதவிக்காக வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி பெட்டிமூலம் அங்கே நடப்பவற்றை பார்த்தார்கள்.

வீடியோவின் அதிபிரகாச ஒளியும், அதன் வெக்கையும், சனங்களின் இரைச்சலும், பிள்ளைக்கு எரிச்சலுட்டதொடங்க பிள்ளை அழத்தொடங்கியது. தாயும், தந்தையும் ஒருவாறு பிள்ளையின் கையைப் பிடித்து பிள்ளைக்காக கேக் வெட்ட இதைப் பார்த்தவர்கள் கைதட்ட பார்க்காதவர்களும் சத்தம்கேட்டு கைகளை தட்டிக்கொண்டனர். கேக் வெட்டும் படலம் நடந்த வேளையில் மறுபக்கத்தால் கடதாசி தட்டுக்களில் பலகாரங்கள் சோடாவுடன் பரிமாறப்பட்டது.

இதுவரையில் சுந்தரமோ மனைவியோ அங்கு வந்திருந்தவர்களில் ஒருவருடனும் கதைக்கவில்லை. அப்படி கதைக்க யாருக்கும் அருகில் சென்றாலோ வீடியோ காரரின் அழைப்பு தடுத்துவிடுகிறது. சுந்தரத்தின் மகனோ களைப்பினால் தாயின் தோள்களில் நித்திரையாகி விட்டான்.

ஆண்களினால் இரவுணவு பரிமாறப்படுகிறது. எல்லோரும் அவசரம்அவசரமாக சாப்பிடுவது தெரிகின்றது. சிலரின் பேச்சில் அன்றே நடக்கும் இன்னுமொரு கொண்டாட்டத்தில் தலைகாட்ட வேண்டியதன் அவசியமும் தெரிந்தது. சாப்பிடுபவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

அனைவரும் வீடியோவின்ஒளியில் இருந்து தப்பமுடியாமல் கண்களை கூசியபடி அவசரமாக சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். சாப்பாடு நடந்து கொண்டிருக்கும் போதே அவசரமாக சாப்பிட்டு முடித்தவர்களைக் கொண்ட வரிசையொன்று மேசைகளுக்கு அருகால் உருவாகியிருந்தது. வரிசை களில் நின்றவர்களின் கைகளில் பரிசில் பார்சல்களோ, என்பலப்போ இருந்தது. வரிசை நீண்டுகொண்டுபோக மேசைகளை துப்பரவுசெய்துகொள்ள ஆரம்பித்திருந்தனர் பரிமாறிய ஆண்கள்.பரப்பரப்பாக ஓடியாடி வேலைசெய்துகொண்டிருந்தவர் ஒருவரை மற்றவரொருவர் 'என்ன அடுத்த கிழமை மகளின் பிறந்தநாள் போலை மும்மூரமாக உதவிசெய்கிறீர்கள்' என்றுகிண்டலடித்துக் கொண்டார். கோப்பைகளில் போடப்பட்ட உணவுகள் அதிகஅளவில் குப்பைக்கூடை களுக்காகவும், சோடாப் போத்தல்களில் சோடாக்கள் அரைவாசிக்கு மேல் குடிக்கப் படாமல் ஊற்றுவதற்காக சேமிக்கப் பட்டிருந்தன.

சுந்தரத்தின் மகன் நித்திரையாகிவிட்டபடி யால் வரிசையில் நின்றவர்கள் ஒவ்வொரு வராகவோ, குடும்பமாகவோ சுந்தரம், சுந்தரத்தின் மனைவியுடனும் வீடியோவுக்கு காட்சி தந்து தங்கள் பரிசில்களையும் வழங்கிக்கொண்டனர். சிலர் மேசையில் இருந்த கேக்துண்டை பிள்ளைக்கு ஊட்ட முடியாமற்போனதால் ஆணாயின் சுந்தரத்து க்கோ, பெண்ணாயின் சுந்தரத்தின் மனைவி க்கோ ஊட்டி மகிழ்ந்தனர்.

இடையிடையே சுந்தரத்தின் மனைவி வேறுசாறியில் காட்சி தருவதற்காகவும், வீடியோகாரர் சாப்பிடுவதற்காகவும் வரிசை யின் அசைவில் தடையேற்பட்டது.

ஒருவாறக எல்லாம் முடிவுக்குவர ஓடியாடி வேலை செய்த ஆண்களும், சுந்தரமும், வேறுசிலரும் எஞ்சினர். எல்லோரும் ஒரு இடத்தில் அமர்ந்து கொள்ள வழமையாக இப்படியான கொண்டாட்டங்களுக்குப் பிறகு நடக்கும் தண்ணிப்பார்ட்டி ஆரம்பமாகி சூடு பிடிக்கத் தொடங்கியது.

சுந்தரம் இந்த பிறந்தநாளை ஒழுங்கு செய்ய கடந்த ஒருமாதமாக பட்ட கஷ்டங்கள், செலவுகளை விளக்கினான். அன்று நடந்த விடயங்கள் முதல் இலங்கையின் அரசியல் நிலைவரம், குஷ்புவின் வீழ்ச்சி போன்ற பல விடயங்கள் வரை ஆழமாக இல்லா விட்டாலும் ஓரளவுக்கு அலசப்பட்டன.

இடையில் சுந்தரத்தின் நண்பன் ஒருவன் 'சுந்தரம் ஊரில் இருந்து உன்அம்மாவின் கடிதம் வந்ததோ?' என்று கேட்க சுந்தரம் 'இன்டைக்கு காலையிலை அம்மா கொழும்பிலை வந்து நின்று ரெலிபோன் எடுத்தவ என்னை எடுக்கச்சொல்லி. நான் எடுக்கவில்லை. அவைக்கு என்ன நான் படும் கஷ்டம். மூன்று மாதத்திற்கு ஒருக்கால் ரெலிபோன் 'பில்' வரத்தான் தெரியும் என்னுடைய கஷ்டம்' என்றபடி விஸ்கியை தன்கிளாசிலும், மற்றவர்கள் கிளாசிலும் நிரப்பினான். நண்பர்களும் ஆமோதித்தனர். சுந்தரத்தின் நண்பர்களில் நானும் ஒருவன்.

---

சொந்தமண்..............................பொன்னண்ணா..

மாற்றானின் சொத்தான
மரவள்ளித்தோட்டத்தில்
மகிழ்வோடு கூடுகட்டி
மகிழ்ந்திருக்கும் பறவைகளே!

சொந்தக்காரன் அறுவடைக்கு
சொல்லிக்கொண்டா வருவான்?
அறுவடையவன் முடித்தால்
அங்கெமக்கு இடமேது....அப்போ

பக்கத்து தோட்டக்காரனும்
பங்கெமக்கில்லை என்று
பட்டாசுதனைக்கொழுத்தி
பறக்கவெமைச் செய்திடுவான்.—அதனால்

கள்ளிப்பத்தை என்றாலும்......
கவலையின்றி கூடுகட்ட —எம்
சொந்தமண்ணே சுதந்திரமாம்
சிந்தனையில் பதித்திடுவீர்.

---




படிப்பகம்

www.padippakam.com

# மலர்தல்
# வாடல்
# தெரிதல்

பூமி



'வித்தியாசங்களுடனேயே உலகம் – இதில்
ஒருவாறு ஒத்திருப்பவை குழுக்கள்.
முற்றத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்
எறும்புகளுக்கிடையே அகப்பட்ட
ஒரு
தேங்காய்ப்பூப்போல..........ஒரு மனிதன்.
மலர்ந்தும்
வாடியும்
ஞானித்தும் கொண்ட.....
ஒரு ஈழத்து அகதியின்
வடதுருவ அனுபவங்கள்.'

இப்போதெல்லாம் அந்தக்காடு மெல்லமெல்ல பசுமையாகத்தொடங்கிவிட்டது.
இதற்குள்ளேதான் நான் நடக்கும் அந்தப்பாதை இருந்தது.
ஏதாவது இரண்டை இணைப்பன பாதைகள். நோக்கம் கருதிய பயணங்களை முடித்துவைத்து விட்டு படுத்திருப்பனவும் அப்பாதைகள்தான்.
ஆனால் எனக்கும் அப்பாதைக்குமான உறவு வித்தியாசமானது.
இன்று எனது பயணத்திற்கு நோக்கமிருக்கவில்லை. எங்காவது என்னை இட்டுச்செல்வதே அப்பாதை.மனதுக்குள் வாடிப்போய்க்கிடக்கும் என்னை இட்டுச்சென்றோ அப்பாதைகூட பாவியாய் கிடந்தது?
அப்பாதையே என்னை தவறாது தன்தோளிட்டுச்சென்றது.



படிப்பகம்

www.padippakam.com

நான் அதன்வழி. அது தன்வழி.
இப்பாதைவழியேதான் ..........
அவள் வருவாள் போவாள்.
அவள் இன்றும் வரலாம் என்றநினைவோடு நடந்தேன்.
நேராகச்சென்றபாதை கொஞ்சம் வளைந்து மீண்டும் நேராய் அது போனது.
நானும் அப்பாதையின்வழி அந்த வளைவில் திரும்பி வளைந்தேன்.
அப்பாதையோரத்தில் அங்கு பெரியதொரு மரக்குற்றியொன்று படுத்திருந்தது.
முன்னர் நேராகக்கிடந்த அந்தப்பாதை தனது பாதையை மாற்றிக்கொண்டதற்கு இந்த இராட்சத மரக்குற்றியே காரணமாயிற்று.
அந்த மரக்குற்றியை பார்த்தேன். நேராகக்கிடந்த பாதைமீது இந்த மரக்குற்றி விழுந்தது, பாதை தன்னைவளைத்துக்கொண்டது.அப்பாதையைஉபயோகிப்பவர்கள்,அந்தமரக்குற்றியை அகற்ற முயற்சிக்கவில்லை.தமது பயணத்தை மட்டும் வளைத்துச்சரிசெய்துகொண்டார்கள்.
இது எனக்கும் பொருந்தும்.எனது தாயகத்தை நான் பிரிந்து தலைமறைவானதற்கும் இந்த மரக்குற்றிக்கும் சம்மந்தமிருந்தது.
இது என்னைநானேகுற்றம்பார்த்துக்கொள்ளுகின்ற விடையம்.
இயலாமைக்குஎனக்குநானேசூடுபோட்டுக்கொள்ள விரும்பும் நெருப்பு.
காற்றில் குருவிகள் அதை காயப்படுத்தாமலே அதன்மீதேறிப்போயின.
குனிந்தால் வெட்கம். நான் என்னைப்பாத்துச் சிரித்தது.

எங்களூரைக் கடந்து, மிதந்து செல்லும் மாலைக்கள்ளின் உசாரோடு காத்தான்கூத்துப் பாடல்களை ஊர்சிரிக்கும் பாடலாக்கி, வேலிகளுக்கு முட்டுக்கொடுத்துப்போகும் நாகலிங்கத்தார்
பாதையில் பிரண்டுபோனதுபோல இந்த மரக்குற்றியும்.
மெல்ல அதில் உட்காந்துகொண்டேன்.
அதோ அவள் வருகிறாள்.

கைக்கயிற்றில் அவளைத்தொடரும் அந்தக் கறுப்புநாய். மறுகையில் தொங்கும் ஒரு சேலைப்பை.
கறுப்பு ஓவக்கோட்.வெள்ளைப்புள்ளிப்பாவாடை. கழுத்தைச்சுற்றிய நிறைந்த பூப்பதித்த இளநீலப்பட்டுத்துணி.
குனிந்த நடை. அவள் அழகானவள்.
என்னருகில் வந்த அவள் நின்றாள்.
நேர்த்தியாக வாரப்பட்டு, அவளுடைய வெள்ளைநிற அடங்காத கட்டைக்கூந்தல் கூக்கிடும்படியாக; பின்புறத்தில் இறுக்கியொரு கட்டு.
என்னை கூர்ந்து பார்த்தாள்.
எழுந்து நின்றேன்.
ஓரடி அருகினாள். அவள்கைகள் சற்று நடுங்கின.அவளின் கறுப்புநாய் வெருண்டு சற்று பின்னடித்தது.அவள் அதற்கு ஏதோ சொன்னாள். அவளின்முகமெல்லாம்சுருக்கங்கள். தேசப்படங்களில் நிறைந்துள்ள பாதை, நதிகளுக்கான குறியீடுகளைப்போல....
அச்சுருக்கங்களுக்கிடையே ஆழவிழிகள்.
வயதான அந்த நீலவிழிகள் கலங்கிக்கிடந்தது.
சிவந்தும், சுருக்கிக்கிடந்த கீழுதட்டை மேலுதடு பற்றிப்பிடித்துக் கடித்தது.
முகம் ஒருமுறை ஆடிக்கொண்டது.
தொடர்ந்து ஒரு பெருமூச்சு.நான் அவளை பார்த்துக்கொண்டே நின்றேன்.
சிரித்தாள் மெதுவாக.
அதில் ஒரு வரவேற்பு.
நானும் சிரித்தேன்.ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.
ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.
பாதை அவளை கூட்டிப்போனது.
அவளின் சிரிப்பில் மலர்ந்துபோனேன்.
பின்னர் பலமுறை சந்தித்தோம்.சிரிப்புத்தான்.
சிலவேளை ஏதோ சொல்லவருவாள்.எனக்குவிளங்காது என்பது அவளுக்கு விளங்கியிருக்கவேண்டும்.
அவள் என்னசொல்லவிரும்புகிறாள் என்பதை அறியும் டனிஸ்மொழி அறிவை நான் பெற்றபோது......
அவள் இறந்துவிட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

## மனதோடு பேசுதல்

செல்வன்

முகில்களின் நெரிசல்களில்
பொலிவிழந்து
உலவும் ஒரு நிலவாக.

நேர்வுகளின் நெரிச்சல்களில்
இன்று– நீயும்
நினைவுகளில் ஒரு நினைவாக.

சரித்திரம்;
நாம் சந்தித்த சமகாலத்தில்
சரிவுகளைச் சந்திக்க ஆரம்பித்தது.

எம்மண்ணில்
'றோஜா' பயிரிட
ஆரம்பித்த காலம் அது.

றோஜா வளர்ப்பில்
ஏதும் உதவலாம் என
நான் வந்த போது
நறுமணம் கமழும் ஒரு புது மலராய்
நீயும் அங்கு நின்றாய்.


எமது றோஜா
துளிர் விட ஆரம்பித்தது.
விடிவு விரைவில் என
நாம் முடிவு செய்தோம்.

'றோஜா' தொடர்பான
உன் அக்கறைகள்
என்னை அயர வைத்தது.
என் மனதில் உன்னை உயர வைத்தது.

மலருடன் உறவாட – தேடிவரும்
வண்டுகள் பேசுகின்ற பாசையை
ஓசை இன்றி
செவிமடுக்க ஆசை என்பாய்.

பச்சை நிறத்துப் புல்வெளியில்
கொள்ளை அழகுடன்
வெள்ளை நிறத்துப் பறவைகள்
கிள்ளை மொழி பேசி
காதல் செய்து உறவாடும்.

காலை வேளைகளில்
கதிர்களை உண்டு விளையாடும்



வெள்ளைப் பறவைகளை
கலங்க வைத்து,
கலைப்பர் இந்த வயல்வெளி மனிதர்.

இவர்களை
எவ்வாறு நான் நேசிக்க?
என்பாய் நீ நெஞ்சுருக.

உனை புரிந்து கொள்ள
முனைந்த போதெல்லாம்
'புளாங்கிதம்' என்னுள் புகுந்து கொண்டது.

நாம் நாட்டிய றோஜா
தானாக வளர ஆரம்பித்தது
இலைகளே இல்லாமல்
கிளைகள் எல்லாம் முட்களாக.

றோஜா
மேலும் மேலும்
வளர ஆரம்பித்தது.
றோஜா போல் இல்லாமல்
இராட்சததனமாக.

றோஜாக் கிளைகளிலிருந்து
வளைந்து வளைந்து
வளர்ந்த விழுதுகள்
மனித உரிமைகளைத் தேடித்தேடி



படிப்பகம்

www.padippakam.com

வளைத்துக் கொண்டன.
கிணறு வெட்ட
பூதம் புறப்பட்டது போலவே
எம்முயற்சிகளும் முடிவுகளும்.

எங்கள் உதடுகள்
உச்சரிக்க எத்தனித்த
வார்த்தைகள் எல்லாம்
குரல்வளையில் வைத்தே
பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது.

எங்கள் பாதங்கள்
பயணமாகும் பாதைகளைப்
பதிவு செய்ய
பதிவு கருவிகள் – எங்கள்
பாதங்களுடனேயே பொருத்தப்பட்டன.

எங்கள் கண் அசைவுகளுக்கும்
கருத்துக்கள் கற்பிக்கப்பட்டு
காரணங்கள் கோரப்பட்டன.

கண்களின் ஓரம்
கவலையின் பாரம் தெரிய
வடகடல் ஓரமாய் – உன்னை
நான் இறுதியாகக் கண்டது.
நேற்று நிகழ்ந்தது போல
இன்றும் மனத்திரையில் எழுகின்றது.

அது
இரவுக்கும் பகலுக்கும்
இடைப்பட்ட ஒரு நேரம்.

எதிர் எதிராய்
நாம் அமர்ந்திருந்தோம்.
பேசவேண்டியவற்றை
மனதிற்குள் மட்டும் பேசிக் கொண்டோம்.
காற்றும் கடலும் மட்டும்
மனம் திறந்து பேசிக்கொண்டே இருந்தன.

நீண்டு கொண்டு
செல்லும் மௌனத்தை
எவ்வளவு நேரத்திற்கு என்று
நாம் அனுமதிப்பது?
நம்பிக்கையே இன்றி நானே ஆரம்பித்தேன்.

'எங்காவது சென்று
எமக்காக நாம் வாழ்வோம்,'
என்னுடன் கூட நீ வருவாயா? என்று...

வட கடல் காற்றும்
நாகரீகம் அறிந்தது.
எம்மைத் தனியே வீட்டுவிட்டு
மெல்ல நழுவிச் சென்றது.

வெளிச்சத்தை இழந்துவிட்ட
எங்கள் வெளிச்ச வீட்டின் மீது
விண்மீன்களின் வெளிச்சம்
வீழுந்து கொண்டிருந்தது.

உந்தன் உதடுகள்
உதிரவுள்ள வார்த்தைகளுக்காக
ஆர்ப்பரிக்கும் அலைகளும்
சற்று அடக்கி அமைதி காத்தது.

விடைக்காக சிந்திக்க
நீ மௌனித்த சில கணங்கள்
திகில் நிறைந்த
பலயுகங்களாக எனக்குப் பட்டது.

உந்தன் முத்துப் பற்களுக்குள்
அகப்பட்டுத் துடித்தது.
உந்தன் கீழ் உதடு,
எந்தன் மனத்தைப் போல.

விடை அளிக்க முன்னர்
சிரிக்க வேண்டும் என்பது
ஒரு நியதி போல
நீ சிரமப்பட்டு மெல்லச் சிரித்தாய்,
விரக்தியுடன்.

'இறக்கலாம்,
ஆனால் எவ்வாறு தான்
நாம் எம்மண்ணையும்
எம் உரிமைகளையும் துறப்பது? என்றாய்
நாத் தழு தழுக்க.

உன் வினாவுக்கு
விடை தெரியா விட்டாலும்
வினாவின் பொருள் புரிந்தது.
என் மனம் பதறியது.
இந்த உடல் உதறியது.
அந்தக் கடல் கதறியது.

கரையோரம் கட்டப்பட்ட
ஒரு மணல் வீட்டை
அலை ஒன்று வந்து
கலைத்து விட்டுச் சென்றது;
மனதோரம் இருந்த என் கனாவை
உன் வினா வந்து கலைத்தது போல...



படிப்பகம்

www.padippakam.com

இருட்டறைக்குள்
இல்லாத ஒரு கறுத்தப்பூனையை
பாடுபட்டுத் தேடியது போலவே
உன் தேடல்களும்.

காரணத்தை
என்ன என்று சொல்ல?
காரியங்கள் கைமீறிப் போய் விட்டன.

காலத்திற்கு
என்ன கவலை?
பந்தயம் கட்டி ஓடுவது போல
ஓடிக் கொண்டே இருக்கிறது.

'துயரம்'
தூரத்திற்கு
துரத்திக் கொண்டே வந்திருக்கிறது,
இறுதி வரை விடுவதில்லை என்ற
உறுதியுடன்.

'கை விளக்கில் படி
கை விளக்கையும் படி, விளக்கமாகும்'
என்ற மேத்தாவின் வரிகளுக்கு
நீ அன்று தந்த விளக்கம்
இன்று வரை குழப்பமாகவே இருக்கிறது.

கவிதைகளை
இப்போதெல்லாம்
நான் நேசித்து வாசிப்பது இல்லை.

கவிதைகளையும்
கருத்துக்களையும் வாதிக்க
இப்போ எவரும் என்னருகில் இல்லை.

மென்மைகளையும்
மேன்மைகளையும்
நேசிக்கும் மனிதர்களை
உன் பின்னால் நான் காணவே இல்லை.

(இன்னும் வரும்)

## இருள்வெளியாக..................லோகநாதன்.செ

மெதுவூர்ந்து கல்லை
கரைத்தேகும் நீரான
எம் வாழ்வு
மென்மையாகத்தான் தோன்றும்.

∴∴

தொடுவான் கரைபோன்று
நீளமாய்த்தோன்றுமந்த
அண்டவெளி எங்களதாம்
நேற்றுவரை.

∴∴

மனிதத்தைத் தின்று
மாமிசம் வெறுத்தோரிடம்
எங்கள் விரதங்களை
புடம்போட்டு
வெட்கித்துக்கொள்ளல்.

∴∴

கருமுகிலோ தரைபடர்ந்து
தஞ்சம்கோரி எம்
கருவழித்தேகுமென்றால்
இருளும் கரைந்தொழுகி
போர்த்திக் கொள்ளும்
இதன் சாரம் எம்
முகத்தோரம்.

∴∴

சீழோடும் உடலுக்கு
தோகையாய் உடுத்திடினும்
தடித்த நாவில் உருசிமறந்து
வழித்தெறிய
ஏதேதோ தேடிக்கொள்ளும்.

∴∴

இப்படியே வடதுருவம்
கறுப்பென்றால்
எம் பருவம்
இருள் வெளியாக.



படிப்பகம்

www.padippakam.com

# நல்ல காலம் எப்போது வரும் . . . ?

கே . எஸ் . துரை .

"நல்ல காலம் நமக்கு எப்போது வரும் ?" இப்படியொரு கேள்வியை மனிதர்கள் எப்பொழுதும் மாற்றமில்லாமல் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள் . அறிவு பெற்ற மனித குலம் விலங்கு நிலையில் இருந்து தன்னை வேறு படுத்திக் கொண்ட முதல் நாளிலிருந்து , இன்று வரை இக் கேள்வியின் வடிவமானது மாற்றமடைய வில்லை . நல்ல காலம் என்னும் சுவை மிக்க கனவுப் பொருளை துரத்திக் கொண்டு , மிக வேகமாக ஓடிய உலகம் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளைத் தாண்டியும் வந்து விட்டது . இந்த ஓட்டங்களைத்தான் கிறீஸ்துவிற்குப் பின்பு சுமார் இரண்டாயிரம் ஆண்டு காலம்வரை எழுதி முடிக்கப் பட்டுள்ள வரலாற்றுச் சம்வங்களிலிருந்து நாம் படிக்கிறோம். மன்னராட்சிக் காலத்திலும் , மக்களாட்சிக் காலத்திலும் வரலாற்றை முன்னெடுத்த எல்லோரதும் எல்லாவிதமான காரியங்களும் தமக்கோ அல்லது பிறருக்கோ நல்லது நடக்க வேண்டும் என்ற எதிர் பார்ப்புடனேயே செய்தும் முடிக்கப் பட்டுள்ளன .இதுவே உலக வரலாற்றின் பிரதான மூலக் கதையாகும் ஆனால் அவர்கள் எதிர் பார்த்த நல்ல காலம்தான் இன்றுவரை வந்ததாகத் தெரியவில்லை . ஆகையால் தான் வரலாற்றைச் சீர்தூக்கிய ஹென்றி போட் என்ற அறிஞர் " சரித்திரம் ஒரு குப்பைத் தொட்டி . " என்று தனது முடிவைப் பளிச் சென்று உலகிற்கு எடுத்துச் சொன்னார் .

" மனிதர்களுடைய வாழ்க்கையானது மீட்பிற்குக் கடவுள் , மன அமைதிபெற விதி , எப்போதும் ஆனந்தமாக இருக்க எதிர் காலமென வகுக்கப்பட்ட ஒரு எல்லைக்குள் சுழலும் போது அது நல்ல காலத்தை எதிர் காலத்திற்குள்ளேயே தேடிப் பார்க்கும் . " என்ற செய்தியை ஜே . கிருஷ்ணமூர்த்தி உட்பட வேறு பலரும் எடுத்துரைத்துள்ளனர் . " பிள்ளையாருக்குக் கலியாணம் நாளைக்கு . " என்ற நமது பேச்சு வழக்குப் பழமொழியும் , " உழவன் எப்போதுமே அடுத்த ஆண்டு பணக்காரனாக இருப்பவன் ." என்ற ரஸ்யப் பழமொழியும் நல்லகாலம் இனிமேல் தான் வரவிருக்கிறது என்ற நமது எண்ணப் பாங்குகளின் மறு வெளிப்பாடுகளேயாகும் . நல்ல காலம் என்ற சொற்பதம் காலத்துடன் தொடர்பு பட்டது . இந்த நல்ல காலம் எந்தப் புள்ளியில் மறைந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதே இன்றைய அறிவின் முதல் பணியாகும் . நேரத்தின் பெறுமதியை மேலும் அகலிப்பதன் மூலம் இந்தத் தேடலை நாம் ஆரம்பிக்கலாம் .

வீதியால் சென்ற நண்பர்கள் இருவர் சந்தித்துக் கொண்ட போது தம்முள் பேசிய உரையாடலில் நேரத்தைப் பற்றிய காத்திரமான செய்தி ஒன்றைக் கேட்க முடிந்தது .

" உம்முடைய வயதென்ன ? "

" முன்னூற்றி ஐம்பது . . "

" முன்னூற்றி ஐம்பதோ . .? ஏன் சொல்லமாட்டாய் ? நாற்பது வயது போனால் நாய்ப் புத்தி வருமெண்டு சும்மாவே சொன்னவங்கள் ? "

" நாற்பது வயது போனால் நாய்ப் புத்தி வராது , நாற் புத்தி வரும் . அறம் , பொருள் , இன்பம் , வீடு என்ற நாலு விஷயங்களையும் அறியக் கூடிய வயசு என்பது தான் அதன் அர்த்தம் ."



படிப்பகம்

www.padippakam.com

" சரி . . சரி . . உமக்கு இப்ப நாலும் தெரியிற வயதுதான் . அப்ப ஏன் முன்னூற்றி ஐம் பது வயதென்று பொய் கூறினீர் ? "

" இப்பவும் சொல்லுறன் எனக்கு வயது முன்னூற்றி ஐம்பதுதான் . நான் செய்திருக்கிற காரியங்களை ஒவ்வொன்றாக எண்ணிப்பார் . அவ்வளவையும் உன்னைப் போல ஒருவர் செய்வதானால் நிட்சயமாய் முன்னூற்றி ஐம்பது வருடங்கள் எடுக்கும் ." கூறியவர் காலத்தின் தேவை கருதி சட்டெனப் போய்விட்டார் . மற்றவர் வீதியோரம் யோசித்த படியே நின்றார் . இருவரதும் உரையாடலில் மேற்கண்ட தேடலுக்கு அவசியமான இரண்டு மூலக் கருத்துக்கள் இருப்பது தெரிந்தது .

இதில் காணப்பட்ட முதலாவது கருத்தின்படி , வயதைத் தீர்மானிப்பது வருடங்களல்ல அவர் வாழ்க்கையில் நிகழ்த்திய சாதனைகள் தான் . இதைத்தான் இன்னொரு வழியில் ,

**" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல் ."**

என்ற திருக்குறளில் காண்கிறோம் . ஒருவரின் சிறப்பை அவர் புரிந்த காரியங்களே தீர்மானிக்கும் என் பதை இக்குறள் மிகத் திட்டவட்டமாக எடுத்தியம்புகிறது . இரண்டாவது கருத்தின்படி ஒரு பழமொழி தனது உண்மையான கருத்தை இழந்து, வேறொரு கருத்துப் பெற்று பட்டி தொட்டி எல்லாம் போயும் சேர்ந்து விட்டது . இவ்விரு கருத்துக்களும் நல்ல காலத்தைத் தேடும் பணியில் இரு பெரும் அச்சாணி களாகச் செருகப் பட்டிருப்பதை கூர்மையுடன் பார்ப்பின் புரிந்து கொள்ளலாம் .

ஒரு மனிதனின் ஆயுட் காலம் எவ்வளவு ? என்ற கேள்விக்கு சித்த சாஸ்திரத்தில் 120 ஆண்டுகள் என விடை தரப்பட்டுள்ளது . ஒரு வேளை 120 ஆண்டுகள் வாழ்ந்தாலும் சாதாரண மனிதர்களால் புரியமுடியாத சாதனைகளை மிகமிகச் சொற்ப காலம் வாழ்ந்த சிலர் சாதித்து முடித்திரு க்கிறார்களே இது எப்படி ? ஜேசுநாதர் 33 வயது , சம்மந்தர் 18 வயது , பாரதி 39 , முன்னாள் பாண்டி நாடு முதலமைச்சர் மாணிக்கவாசகர் 24 வயதுமே வாழ்ந்தார்கள் . ஆனால் இவர்கள் புரிந்துள்ள சாதனைகளை சீர்தூக்கிப் பார்த்தால் பல நூறுகள் வாழ்ந்து செய்ய வேண்டிய காரியங்களை மிகச் சொற்ப காலமே வாழ்ந்து செய்தும் முடித்துள்ளமை தெரிகிறது . இந்தச் சாதனைகளை எட்டிப் பிடிக்க முடியாத பொழுது உலகம் இவர்களில் சிலரை மகான்களாகவும் , வேறு சிலரை மகாகவிகளாகவும் கருதியது . இன்னொரு பக்கம் வயது என்பது வருடங்களுக்குள் இல்லை என்னும் மாபெரும் தத்துவமும் இவர்களின் வாழ்க்கைக்குள் மறைந்து கிடக்கிறதே ? என்பதை அறிவுக்கண் கொண்டு பார்க்க முடியாதவாறு நம்முள் பல மனத்தடைகள் உண்டு." இந்த ஒளி பெற்ற மகான்களின் போதனை களினால் தானே இன்றும் உலகம் அழிந்து போகாமல் இருக்கிறது." என்ற நம்பிக்கையே மனித குலத்தை வழி நடத்தும் மூல விசையாக உள்ளது . ஆனால் எல்லா மூல விசைகளுக்கும் ஒரு எதிர் விசை இருப்பது போல இந்த எண்ணங்களுக்கும் ஓர் எதிர் விசை உண்டு . எவ்வாறெனில் இந்த மகான்களின் போதனைகளை உள்வாங்கும் ஒவ்வொரு மனிதனும் அவை நம்மால் நிகழ்த்தப் படக்கூடிய சாதனைகள் அல்ல என்ற எண்ணங்களாலும் எப்படியோ பாதிக்கப் பட்டு விடுகிறான் . இந்தத் தாழ்வு பட்ட நிலையானது மேற்கண்ட மகான்கள் நேர அளவை பயன் படுத்தி எப்படி உயர்வு பெற்றார்கள் ? என்று ஆய்வு செய்ய வேண்டிய பார்வைப் பக்கத்தை குருடாக்கி வைத்து விடுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றிலே போட்ட பொன்னைக் குளத்திலே எடுத்தார் என்று உணர்ச்சி மீதுறப் படிக்கும் மாணவர்கள் தோளில் சுமந்து செல்வதை விட விரைந்து ஓடும் ஆற்றின்



படிப்பகம்

www.padippakam.com

வழியே பொன்னை வேகமாக குளத்திற்கு எடுத்துச் சென்று விடலாமே ? என்ற கோணத்தில் சிந்திக்கத் தூண்டப் படுவதில்லை. ( ஆற்று நீரைச் சேமிப்பதற்காகவே ஆறுகளின் அருகில் குளங்கள் வெட்டப் படுகின்றன . ) இதன் காரணமாக சுந்தரர் என்னும் மகானின் வாழ்க்கைக்குள் மறைந்து கிடக்கும் வேகப் பயன் பாட்டுத் தத்துவத்தையும் அவர்கள் அடையாளம் காணத் தவறி விடுகிறார்கள் . இந்த வேகம் சுந்தரரின் வாழ்க்கைக்குள் மட்டுமல்ல , உலகின் சகல வெற்றிகளுக்குள்ளுமே மறைந்து கிடக்கிறது . அமெரிக்காவின் உளவு விமானம் லொக்கேட் 71 புவி மேற்பரப்பில் சுமார் 260000 சதுர கிலோ மீட்டர்களை ஒரு மணி நேரத்திலேயே உளவு பார்த்து முடித்து விடுகிறது . இதன் வேகம் மணிக்கு 3520 கிலோ மீட்டர்கள். இதன் ஒலி காதுகளுக்கும் கேட்காது . அமெரிக்காவின் எதிரி நாடுகளின் மீது இது தினசரி பறக்கிறது . இன்றுவரை இந்த வேக விமானத்தை சுட்டு வீழ்த்தும் வல்லமையை அதன் எதிரி நாடுகள் பெற்றுவிடவில்லை . இந்த அசுர வேகம்தான் அமெரிக்காவின் வல்லாதிக்க சக்தியை இன்றும் உலகில் முதன்மைப் படுத்தி வைத்திருக்கிறது .

இந்த வேக விமானத்தின் சாதனைக்குரிய ஒரு மணி நேரத்தை இழப்பது தமிழர் வாழ்வில் ஏதோ பேருந்து வண்டிக்குக் காத்திருந்தோம் என்றளவில் ஒரு சிறு கொசுக்கடி நிகழ்வு போலவே கணிக்கப் படுகிறது . இதற்கான காரணங்களில் ஒன்று தமிழினம் காலனித்துவ காலத்திலிருந்தே அடிமைப்பட்ட இனமாக இருந்து வருவது. மற்றயது வாழ்க்கையை வருடங்களுக்குள் கணக்குப் பண்ணிக் கொள்ளும் பழைய சிந்தனையை இன்றுவரை மாற்றியமைத்துக் கொள்ளாமல் இருப்பதுமாகும் . ஒருவருடைய ஆயுட்காலத்தை வருடங்களுக்குள் கணக்குப் பார்ப்பதைத் தவிர்த்து , அவருடைய ஆயுட்காலம்மொத்தம் எத்தனை மணி நேரங்கள் என்பதையே நவீன உலகம் துல்லியமாகக் கணக்கிடுகிறது . ஆகவேதான் வேதனத்தை ஒவ்வொரு மணி நேரத்திற்கும் கணக்குப் பார்த்து வழங்குகிறார்கள் . தொழிற் சாலை உற்பத்தியில் வளர்ந்த நாடுகள் அனைத்திலுமே உற்பத்தியில் " சென்ரிமினூற் " என்னும் சதம நேர அளவே பயன்பாட்டிலும் உள்ளது ( ஒரு மணி நேரத்தை நூறாகப் பிரித்து வரும் ஒரு சிறு அலகே இந்தச் சதம நிமிடமாகும் . ) இந்தச் சின்னஞ் சிறிய கால அளவை தமதுவாழ்க்கையில் பென்னம் பெரிய காலப் பகுதியாக இன்றைய ஐரோப்பா சிந்திக்கிறது . இந்தச் சிந்தனையே அவர்களின் வளர்ச்சியின் ஆணிவேராகும் .

ஆனால் நேர விரயமானது தமிழர்களிடையே ஒரு நீண்ட பாரம்பரியப் பழக்கமாகவே இருந்து வந்துள்ளது . நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தி உயர்வு பெற்ற செய்திகள் எதையும் பண்டைய தமிழர் வாழ்க்கைச் செய்திகள் பிரபலப் படுத்திக் காட்டவில்லை . இந்த வகையில் 15 ம் நூற்றாண்டைச் சேர்ந்த காளமேகப் புலவரின் பாடலொன்று நேரம் எப்படிப் பயன்படுத்தப் பட்டது என்பதை அழகாகப் பாடுகிறது . நாகபட்டணத்திலுள்ள சத்திரமொன்றிற்கு இவர் உணவருந்தச் சென்ற போது அங்கு உணவு வந்து சேர எடுத்த காலதாமதத்தை ,

**" கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போதில் அரிசிவரும் — குத்தி**
**உலையிலிட ஊர் உறங்கும் , ஓர் அகப்பை அன்னம்**
**இலையிலிட வெள்ளி எழும் . "**

என்று பாடிவைத்தார். அன்று கட்டணமின்றி உணவளிக்கும் ஓர் சத்திரத்தில் நிலவிய இக் கால தாமதத்தை தமிழ் இலக்கியகாரர் ஆசுகவியாகவும் ( பாடெனப் பாடுவோன் ) , கேலிப் பாடல் வகையாகவும் கருதினரேயல்லாது , காலத்தை விரயமாக்கி அழிந்து போகும் பெருநோய்க் குறியாகச் சுட்டிக்காட்ட



படிப்பகம்

www.padippakam.com

மறந்து போயினர் . இந்த வகையில் இந்த நூற்றாண்டின் இன்னோர் செய்தியையும் சேர்த்துக் கொள் ளல் நலம் . "காலஞ்சென்ற தமிழக முதல்வர் ஒருவர் பேசவருவதைக் காண ஒரு இலட்சம் வரையான மக்கள் காத்திருந்தார்கள். மாலை ஆறு மணி அவர் வர வேண்டிய நேரம் . சரியாக அதே நேரத் திற்கு அவர் வந்து சேர்ந்தார் . ஆனால் திகதிதான் ஒரு நாள் அதிகரித் திருந்தது ." என்று தமிழகத்தின் பிரபல சஞ்சிகை ஒன்று கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் எழுதியிருந்தது . ஒரு முழு நாள் பொழுதை ஒரு இலட்சம் பேர் மிக அலட்சியமாக இழந்திருக்கிறார்கள் . இதன் மொத்த நேரப் பெறுமதி ஒரு இலட்சம் தினங்கள் . ( 274 வருடங்கள் ) இன்றும் எத்தனையோ அரசியல் கூட்டங்கள் , தாமதமாகும் விழாக்கள் , அரட்டையடித்தல் , விளக்கக் குறைவால் ஏற்படும் இழுத்தடிப்புக்கள், வீண் தொலைபேசி உரையாடல்கள் என கால விரயம் நம்மிடையே காட்டாற்று வெள்ளமாகக் கரை புரண்டு ஓடுகிறது . புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் கலாச்சாரத்தை வேகமாக இழந்து கொண்டிருக்கிறார்கள் என்று வேதனைப் படுவோர் கூட நாகபட்டணம் சத்திரத்திலிருந்து கடைசி டென்மார்க் வரை நேரவிரயம் என்பது தமிழர் சமுதாயத்தின் மாற்றமில்லாக் கலாச்சாரப் பெறுமதியாக நிற்பதை இனங்காண தவறி விட்டனர் . இந்த நிலையில் நாம் சென்ரிமினுற் வாழ்க்கை முறைக்குள் நுழைந்து , நவீன உ கைத்தோடு எப்படிக் கைகோர்த்து முன்னேற்றம் அடைவது என்பது கடினமானதோர் கேள்வியாகும்

ஒரே நேரத்தில் எட்டு விடயங்களைக் கவனிக்கும் அட்டாவ தானிகளும் , நூறு விடயங்களைக் கவனிக்கும் சதாவதானிகளும் தமிழர் சமூகத்திலும் இருந்துள்ளனர் ஆனால் இந்த அட்டாவதானமும் , சதாவதானமும் ஒரு சில தனி மனிதர்களின் திறமையாகப் புகழப் பட்டதேயன்றி , தமிழர் என்ற சமுதாயப் பெரு வெள்ளத்தின் அசைவிற்குள் வைக்கப் படாமல் போனது வருந்தத் தக்கதே .இல்லா விட்டால் சங்க காலம் என்னும் முதல் மூன்று நூற்றாண்டுகளில் காதலும் வீரமும் , அடுத்த மூன்று நூற்றாண்டுகள் நீதியும் போதனையும் , தொடர்ந்த பல்லவர் கால மூன்று நூற்றாண்டுகள் பக்தியும் சமயமுமென ஐரேப்பியருக்கு அடிமையாகும் வரை ஒவ்வொரு மூன்று நூற்றாண்டு களையும் ஒவ்வொரு தலைமையான காரியங்களுக்காக மட்டுமே நகர்த்திக் கொண்டு தமிழர் சமுதாயம் ஒரு வழிப் பயணத்திலேயே வந்து சேர்ந்திருக்க முடியாதல்லவா ? இதனால் தான் கைத்தொழில் புரட்சி , விவசாயப் புரட்சி போன்ற கண்டிப்பாக நிகழ்த்தப் பட்டிருக்கவேண்டிய காரியங்களை எல்லாம் நமது வரலாறு நிகழ்த்தாமலும், மறுபக்கம் நிகழ்த்த முடியாமல் அன்னியரால் தடுக்கப் பட்டும் போய்விட்டது .

"நேர ஒழுங்கின்மை விடுதலை பெறாத சமூகம் ஒன்றின் தேசிய அடையாளங்களில் ஒன்று ." என்பது ஒரு பழமொழி . சமுதாய நகர்வின் அசுர வேகத்தை எட்டிப் பிடிக்க முடியாத போது இயற்கையாகவே ஒரு மனிதன் பின் தள்ளி வீசப்படுகிறான். அந்த நேரத்தில் அவனுக்கு ஏற்படும் விரக்தி நல்ல காலத் தேடலுக்குள்ளேயே அவனது மனத்தைச் சுளுவாக அழைத்துச் செல்லுகிறது . அவனும் நிகழ் காலத்தைக் கோட்டை விட்டு , எதிர் காலத் தேடலுக்குள் புகுந்து சுவை மிகுந்த கற்பனைகளில் மூழ்கித் திளைக்கிறான் . பத்திரிகைகளைத் தூக்கியவுடன் முதலில் வார பலனைத் தேடியே பார்வையைச் செலுத்துகிறான் . நல்ல காலத்திற்காகக் காத்திருப்பது மடமை என்பதை இந்த நூற்றாண்டில் சுட்டிக் காட்டுவது அபத்தம் . ஏனெனில் ,

**" தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருந்தக் கூலி தரும் .**

"என்பது வள்ளுவர் சுட்டிக் காட்டிய இரண்டாயிரம் ஆண்டுப் பழைய செய்தியாகும் . பழமொழி ஒன்று



படிப்பகம்

www.padippakam.com

பொருள் மாறிப்போனது போல , இந்தத் திருக்குறளும் தேடுவாரற்றுப் போனது .

இதயத் துடிப்பு எந்தக் காலத்திற்குள் நடை பெறுகிறது என்பது ஒரு கேள்விக் குறி ? இதயத் துடிப்பு நின்று விட்டால் வாழ்க்கை இல்லை .இந்த இதயமானது இறந்த காலத்திற்குள்ளோ அல்லது எதிர் காலத்திற்குள்ளோ துடிப்பதில்லை. அது நிகழ் காலத்தில் மட்டுமே தொழிற் படுகிறது . அந்த நிகழ் காலத்தின் பெறுமதியை சதம நிமிடங்களிலிருந்து மாற்றி மேலும் அகலிக்க வேண்டிய அவசியத்தை புதிய உலகம் உணர்ந்து கொண்டுள்ளது . திட்டமிட்டால் ஒரு மிகக் குறுகிய நேரத்தில் எண்ணற்ற காரியங்களை நிகழ்த்தலாம் . அப்படி நிகழ்த்தப் படும் போது 40 வருடங்களில் 350 வருடங்களை வாழ்ந்து முடிப்பதும் சாத்தியமான உண்மையே . சூரர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்று பிரமிப் படையும் நாம் குறுகிய காலத்தில் பாரிய சாதனைகளைப் புரிந்தோரை இன்றும் உலகம் சூராதி சூரர் என்று புகழுகிறதே இது ஏன்? என்று காரண காரியங்களுடன் கேள்வி எழுப்பிப் பார்பதில்லை . உலகின் முதன்மை பெற்ற மனிதர்களின் வாழ்க்கைக்குள் எல்லாம் இந்த இரகசியம் மறைந்திருப்பதை சமூகம் விளங்கிக் கொள்ளும்போது நல்ல காலத்தை எதிர் காலத்திற்குள் வைக்கும் அறியாமையும் இயல்பாகவே விடுபட்டுப் போய் விடுகிறது .

நாளை நாளை என்பது
நமது நாளென்றும் அறியீர்
நமனது (இயமனது) நாளென்றும் அறியீர் .

என்பது பிரபலம் பெறாத ஒரு பழந்தமிழ் பாடலே . உண்மையில் நம்மிடையேயும் , " த்ருடி " என்னும் காலத்தை அளக்கும் சொற்பதம் பாவிக்கப் பட்டிருக்கிறது . இது ஒரு வினாடியில் 33,750 தில் ஒரு பகுதியைக் குறிக்கிறது. கணக்கீட்டிற்காக புராணக் கதைகளில் பேசப் பட்ட இவ் விடயத்தை வாழ்க்கையில் பயன்படுத்தக் கூடியளவிற்கு நம்மிடையே விஞ்ஞானம் வளர்ச்சி அடையாமல் போனது ஒரு வரலாற்றுத் துயரே .

வின்சன்ட் சேர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமரான போது நீண்ட காலமாகவே வேலையில்லாமல் காத்திருந்த ஒருவன் தனக்கு ஓர் வேலை தரும்படி அவரிடம் கேட்டான் . அதற்கு அவர் , " உனக்கு இக்கணமே வேலை தருகிறேன். வேலை தேடுவதே இனி உன் வேலை ! " என்றார் மேற்கண்ட வேலை அற்றவனுக்கு அன்றே வேலையும் கிடைத்தது. " நல்ல காலம் என்பது எப்போது வரும் ..?" என்ற கேள்விக்கும் இதற் குள்ளேயே விடையும் இருக்கிறது . இந்த வினாடியை நீ சரியாகப் பயன் படுத்திக் கொண்டால் இக்கணமே உனது நல்ல காலமும் ஆரம்பமாகிவிடுகிறது . உண்மை யில் நல்ல காலமென்பது எதிர் பார்த்திருக்க வேண்டிய ஒன்றல்ல . நாம் வாழும் ஒவ் வொரு அணுப் பொழுதிற்குள்ளும் அது மறைந்திருக்கிறது . தமிழினம் அகவியல் ரீதியாக தன்மீது மாட்டிக் கொண்டுள்ள தளைகளை உடைப்பதில் மட்டுமல்ல , சுதந்திரத்தைத் வென்றெடுக்கும் பணியிலும் இவ் எண்ணப் பாங்கை இக்கணமே கூர்மையுடன் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் . இதை விடுத்து நல்லகாலம் எப்போது வருமெனக் காத்திருந்தால் அது எப்போதும் ரஸ்யப் பழமொழியைப் போல அடுத்த ஆண்டுதான் வர விருக்கிறது .

இழந்த பொருளை மீண்டும் பெறலாம் .!
இழந்த நாட்டை மீண்டும் பெறலாம் .!
இழந்த காலத்தை எப்பொழுதுமே பெறமுடியாது .!

■



படிப்பகம்

www.padippakam.com

இளைஞர் பக்கம்

.................................

*வீடும் வெளியும்*

*புலம்பெயர்ந்த நாடுகளில் இரு வேறுபட்ட புதியசமூகச் சூழலுக்குள் இடர்ப்பட்டு நிற்கும் தமிழ்அகதிகளின் இரண்டாவது சந்ததி பற்றிய கவனஈர்ப்புக்காகவே இந்தப்பக்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.*

*புலம்பெயர்நாடுகளில் அந் நாட்டினத்தினரிடையே வளர்ந்துவரும் இனஎழுச்சிக்கான காரண காரியங்களை ஆய்வுக்குட்படுத்துவோர்; அச்சமூகங்களையும் சந்ததிரீதியாகப்பாகுபடுத்தியேஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.ஏனெனில் பிரச்சனைகளின் காரணங் கள் வேறுவேறானவைகளாக காணப்படுதலேயாகும் குறிப்பாக தமிழ்சமுதாயத்தின் குடும்பக்கட்டமைப்புக்குள் நின்றுநோக்கினால் அது மிகவும் அதிகரித்த இடைவெளியை கொண்டிருப்பதனை காணலாம்.*

*அவற்றை இனங்காண்பது என்பதுவும் கடினமான விடையமாகும்.*

*ஆகவே அந்த இளைஞர்கள் தாங்கள் அனுபவிக்கும் இருவேறுபட்ட உலகத்தின் நன்மை தீமைகளை............................*

*"வீடும் வெளியும்" என்ற இப்பக்கத்தினூடாக கலந்துகொள்கின்றார்கள்.*

*காகம்*

**செல்வி. தி.சி.வாணி எழுதுவது:**
**14 வயது**
**டென்மார்க்.**

தமிழ் கலாச்சாரத்தில் எனக்குப்பிடிக்காத சிலவிடயங்களை எழுதுகின்றேன்.(சென்ற இதழில் பிடித்தவிடையங்களை எழுதினேன்.)நம் தமிழர்களிடையே காலம்தொட்டு நான் கண்டுவரும் பழக்கம் நேரம் தவறுதல், எந்த ஒரு நிகழ்ச்சிக்கு போனாலும் அல்லது ஒருவர் யாரையாவது சந்திப்பது என்று இருந்தாலோ அது குறிப்பிட்ட நேரத்துக்கு நடப்பது இல்லை. அதைப்பற்றி அவர்கள் கவலைப் படுவது இல்லை.

மற்றும் பெண்களை கடவுளாக சரித்திரங்களிலும், கதைகளிலும் எழுதியதைபடிக்கும் போது சந்தோசமாகக்தான் இருக்கிறது. அதேநேரத்தில் நேரில் சில பெண்கள்படும் வேதனையும் பத்திரிகைகளில்வரும் இளம் பெண்களின் மரணஅறிவித்தல்கள், சீதனம் என்னும் கொடு மையால் காலம்காலமாக பெண்கள் கண்ணீருடன் வாழவழியின்றி யிருப்பது அறிந்து மிகவும் வேதனையும் வெறுப்பும் அடைகின்றேன்.

நம் தமிழர்களிடையில் ஒற்றுமை இன்மை, ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்யும் மனம் இருந்தும், வெளிநாட்டில் நம்மவர்கள்(கூடுதலானவர்கள்) ஒதுங்கியே வாழ்கின்றார்கள். இனம் புரியாத ஒரு வெறுப்பை ஒருத்தர் மீது ஒருத்தர் ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள் என்பதை அறிந்து மிகவும் வேதனைப்படுகின்றேன். நாடுவிட்டு நாடு வந்தும் நம்மவர்கள் ஒற்றுமையின்றி இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது நானும் ஒரு தமிழ்ப்பெண்ணாக ஏன் பிறந்தேன்? என எண்ணத் தோன்றுகின்றது.

மற்றும் வயதுவந்த பிள்ளைகளின் திருமணவிடயங்களில் அவர்களின் விருப்பத்திற்குமாறாக சில பெற்றோர்கள் நடந்து கொள்வதும் தாங்கள் விரும்பியஇடங்களில்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களை மணம்முடித்து கொடுப்பதும் என்னை மிகவும் வெறுப்படையச் செய்யும் சில விடயங்கள்.

அடுத்து டெனிஷ் கலாச்சாரத்தில் எனக்குப் பிடிக்காத விடயங்கள் பல இருந்தாலும் அவற்றில் சிலவற்றை எழுதுகின்றேன்.

முக்கியமாக மாணவர்களான என்போன்றவர்கள் பெரியவர்கள், பெற்றோர்களுக்கு மரியாதை கொடுக்கும்விதம், அவர்கள் அவர்களின் பெயர்கள் சொல்லி கூப்பிடுவதும் ஒருவேலை சொன்னால் உடனே எதிர்த்துப் பேசுவதையும் பார்த்து நான் பலதடவை வேதனைப்பட்டதுண்டு. குறிப்பிட்டவயதிற்கு மேல் கூடுதலானவர்கள் பெற்றவர்களைவிட்டு வெளியேறுகின்றார்கள்.தாங்கள் நினைத்தபடி எப்படியெல்லாம் வாழ்கின்றார்கள் பெரியவர்களின் அறிவுரைகளை தட்டிக்கழித்து விட்டு. வாழ்க்கையை பெரியசுமையாக பலர் சொல்லக்கேட்டு இருக்கிறேன். அவர்களை நினைத்து நான் வேதனையும் வெறுப்பும் அடைந்துள்ளேன். வயது வந்த தமது பெற்றோர்களை வயோதிப மடங்களில் விட்டுவிட்டு அன்பாக அவர்களிடம் ஒரு வார்த்தை பேசக்கூட நேரம் இல்லாமல் வேலைக்கும் விசேசங்களுக்கும் நண்பர்களுடன் பாட்டிகளுக்கும் திரியும் பலபெற்றோர்களையும் பெரியவர்களையும் கண்டு நான் வருத்தப்படுகிறேன். பிள்ளைகளுக்கு கண்டிப்புக் கூடாதுஎன்று எந்தநேரமும் அவர்களுக்கு சுதந்திரம் கொடுத்து அவர்களின் வாழ்கையின் அழிவிற்கு காரணமாக இருக்கும் பெற்றோர்களைப் பார்க்கப் பரிதாபமாகவுள்ளது.

மற்றும் என் கண்முன்னே நடந்த நிகழ்ச்சி ஒன்று என்னை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கிய விடயம். ஒரு குடும்பத்தலைவன் இறந்து 3 நாட்கள். (வைத்தியசாலையில் கிடக்கும்போது) மனைவி வீட்டில் தனது பிறந்தநாளைக் கொண்டாடினார். இது அவர்களது கலாச்சாரத்தில் சின்ன விடையமாக இருக்கலாம். ஆனால் எனக்கு மிகவும் பெரியவேதனையை தந்தது.

**தப்ப விரும்பும் தலைமுறைகள்........................**

**..................................................................................ஆதவன்**

**நான்**
**உண்டுகளித்த விட்டில்**
**ஒரு அம்மா இருந்தாள்.**

**∴∴**

**அம்மா என்றால்~**
**அவளுக்கு 65 வயதிற்குமேல்**
**தலைநரைத்த கிழவி அவள்.**
**அவளுடன் 'அஞ்ஞாதவாசம்'புரிகிறேன்**

**∴∴**

**அவள் கேட்பாள்**
**'ஏன்மோனை உனக்கிந்தவேலையெல்லாம்**
**நீ பாட்டுக்குப்**
**பிராக்கைப் பார்த்துக்கொண்டு**
**( F ) பிரான்சுக்குப் போகலாந்தானே?**

**∴∴**

**நான் சிரித்தேன்,**
**மனித இருப்புக்கு**
**அட்வைஸ் சொல்கிறாள்.**

**∴∴**

**என் அன்புக்குரிய பாட்டியே~**
**எனக்கு மூத்த மூன்றாவது தலைமுறையே**
**நன்றியம்மா.**

**∴∴**

**தப்பவிரும்பும் எவனும்**
**'அஞ்ஞாதவாசம்' புரிவதில்லை,**
**போராளிகள் எப்போதும்**
**தப்பவிரும்புவதில்லை.**

**~உள்வெளி (1985)**
**கவிதைத்தொகுதியிலிருந்து~**



படிப்பகம்

www.padippakam.com

## இன்னமும் நிமிர்ந்து நிற்கும்.......

படகேறி நான் வரும்போது
பொங்கிவரும் நுரையோடு
வந்தடிக்கும் அலைகளுக்கப்பால்
மெல்லிய சிறுபுள்ளிகளாய்
போய் மறைந்த என் தேசமே...!

இன்னும் அந்தத் தென்னைகள்
இளநீர்க் குலைகளுடன்
தலைவிரித்து ஆடுகின்றனவா....?

எங்கள் முற்றத்துப் பூவரசு
இன்னும் கிளை பரப்பி
இளம் தென்றலைத் தன்
இலையசைத்துக் தருகின்றதா.....?

மண்ணைத்துளைத்து நிமிர்ந்திடும்.- அந்த
வெள்ளைநிற வெங்காயப்பூ - இன்னும்
எம் தோட்டமெங்கும் நிறைகின்றனவா..?

நாயும் குரைக்காத அந்த
நடுநிசி அமைதியில்- இரவுக்
காற்றில் மிதந்துவரும்
காத்தான் பாடல்கள்- இன்னும்
எங்கள் காற்றெங்கும்
மிதக்கின்றனவா....?

ஆம்: எல்லாம் அப்படியே,
நேற்றைய போல்த்தான்.
இன்னும் தொடர்கின்றது-
இனியும் தொடரும்.
கந்தகப்புகைக்குள்ளாக
இவைதம் கருமத்தை
விடவில்லை.

எம்முதாதையோர் மூச்சும்- முடிவினில்
அவர் எரிந்து எஞ்சிய சாம்பலும்
எங்களின் காற்றிலும், கால்படரும்
மண்ணிலும் கலந்திருப்பதால்
அந்தத் தென்னையும்,
பூவரசு நிழலும்- நடுநிசிக்
காற்றினில் மிதந்திடும்,
காத்தான் பாடலும் இவை
எல்லாம் இன்னமும்
நிமிர்ந்து நிற்கும்- இனிய
தென்றலை வீசி நிற்கும்.

ச.ச.முத்து

## புயல் ....................................................ஜனன்.........

ஈழகுருதி வனத்தில்
தேர்தல்புயல் சொல்லும்
மனிதநேயம் மரணித்த
போர்ப்புயலா?

பாலைவனத்து புயலிலும்
புழுதிப்போரா?
பனிவனத்து புயலிலும்
பனிப்போரா?

அமெரிக்கவனத்தில்
ஆயுதப்புயலில்
சூழல் போரா?
வர்ணத்தின் போரா?
வறுமையின் போரா?
வாழ்வின் விடியற்காய்
ஏங்குபவர் எத்தனை!எத்தனை!

சமய வனத்தில்!
சூத்திரர்புயலில்!
சாதிப் போரா?
ஒன்றே குலமா? ஒருவனே தேவனா?

ஒக்டோபர் மாசத்தில்
புரட்சி கொண்ட புயல்
ரஷ்யவனத்தில்!
இஷங்களையும் நிசங்களையும்
புதைகொள்ளும் - Mafia
Perestrojka !

—o—

**மரம்..................................................காளமேகம்**

பசித்த வாயைப் பூமியின்
இனிய மார்பில் பதித்திருக்கும் மரம்
தினம் முழுதும் கடவுளை நோக்கி
இலை நிறை கைகளை உயர்த்தி
பிரார்த் திக்கும் மரம்
கோடையில் கூந்தலில் பறவைக்
கூடுகள் அணிந்து
குளிரில் மார்பில் பனிக்கட்டி படிந்து
மழையுடன் நெருக்கமாய்
வாழும் மரம்
கவிதைகள் செய்வது
என்போன்ற முட்டாள்கள்
கடவுள் ஒருவர்தான்
மரம் செய்யத் தெரிந்தவர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஐரோப்பாவும் தமிழ்மொழியும்

திருமதி.செ.தம்பிப்பிள்ளை

உலகத்திலே உள்ள மொழிகளிலே மூத்ததும் முன்னேடியானதும் தமிழ்மொழியாகும். விமர்சனங்கள், விளம்பரங்கள், இல்லாமலே எந்தநாட்டவராலும், எந்தக்காலத்தும் கைக் கொள்ளப்பட்டு வரும் பழமையும் இனிமை யும்சுவையும் கலந்தமொழி தமிழ்மொழி யாகும். பழம் என்றால் இனிமையான சுவை என்று அர்த்தம். அந்தப் பழத்தில் உள்ள ழகரச் சுவையுடன் கூடிய மொழி நம் தமிழ் மொழியாகும்.

தமிழையும் தமிழர் தம் கலாச்சாரங்களையும் குழி தோண்டிப்புதைக்கும் ஒரு கால கட்டத்திலே நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒரு இனம் பரந்த முறையில் சிறந்தமுறையில் கல்வியிற் செல்லவேண்டுமாயின் தாய்மொழியிற் தனித் திறமை பெற்று விளங்கவேண்டும். ஒரு தமிழ்குழந்தைக்கு ஆணி வேர் தாய்மொழித் தமிழாக இருக்கமேயாயின் அக்குழந்தை பலமொழிகளில் திறமைசாலியாக வளர வாய்ப்பு ஏற்படும்.

செல்லடிக்கும், சிதறவைக்கும் குண்டடிக் கும் பயந்து, கால்வைத்த இடம் எல்லாம் கண்ணிவெடிகளைக் கடந்து, வீடு வாசல் இழந்து, பந்த பாசங்களைத்துறந்து தாய் பெற்ற மேனியுடன் தரையில் ரயர்போட்டு சக உதிரங்களைத் தகனம் செய்யும் கொடுமை களைக் கண்டு மூளை குழம்பி நெஞ்சம் வெதும்பி கண்கலங்கி அனாதையாய் அகதியாய் ஐரோப்பா வந்த போது நம்முடன் கூடவந்த ஒரேஒரு பொருள் எதுவென்றால் எங்கள் பதில் நம் தாய்மொழித் தமிழ் என்றே வரும்.

தமிழனாகத் தமிழ்மொழியைப் பேசிவந்த தால்தானே அகதி என்ற போர்வைக்குள் ஐரோப்பாவில் அசூல்(asyl) கேட்டு வாழு கின்றோம்.

வெள்ளைக்காரன் தமிழர்களின் நல்ல பண்பு களைக்கண்டு வாழத்துடிக்கும் அதேநேரத் தில் ஐரோப்பா வந்தும் சில நிலையற்ற சுகங்களைக் காணும்போது நம்மவரிடையே சிலமாற்றங்கள் ஏற்படுவதைக் காண்கின் றோம். சிறிது ஐரோப்பியமொழியைக் கற்று விட்டால் தன்னையும் ஐரோப்பியன் என்றே எண்ணுகிறார்கள். தமிழ்மொழியைப் பேசுவ தும் சின்னத்தனம் எனறே எண்ணுகிறார்கள். பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுக்கொடுப் பதில் பின்நிற்கிறார்கள். இப்படி வாழும் நம்மவர்கள் தமிழின் உயர்வை, தமிழின் புகழை, தமிழின் பெருமையை ஐரோப்பிய மண்ணில் வாழ்ந்து கொண்டே அறியப் போகும் நாள் வெகுதொலைவில் இல்லை யென்றே சொல்லலாம். ஐரோப்பிய மண்ணில் வாழும் நாம் ஒன்றைமட்டும் நினைவில் கொள்ளவேண்டும். ஐரோப்பியர் போல நம் குழந்தைகள் கல்வியில் உயர்ந்து செல்ல வேண்டுமாயின் அத்திவாரம் தாய்மொழியாக இருக்கவேண்டும். ஒரு தமிழ்க் குழந்தை பலமொழிகளைப் படித்துப் பட்டம் பெற்று படிப்பு என்ற படிக்கட்டைத்தாண்டும்போது தடுக்கி விழாமல் முன்னேற ஊன்றுகோலாக அமைவது தாய்மொழிக் கல்வியேயாகும். கல்வியென்றபடிக்கட்டுடன் தனது எதிர் கால வாழ்க்கை என்ற படிக்கட்டைத் தாண்டும் போதும் ஒரு குழந்தைக்கு ஊன்றுகோலாக வாழ்கையில் வழுக்கி விழாமல் பாதுகாப்பு அளிப்பது தாய்மொழி தமிழேயாகும்.

"தமிழன் என்றொரு இனம் உண்டு தனியே அவர்க்கொரு குணம் உண்டு" என்பார்கள். அந்தக்தனிக்குணம் என்று சொல்லும்போது அது ஒழுக்கமென்ற உயரியபண்பை உள்ள டக்கியதாகும். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் எந்தமொழியைப் பேசினாலும் தமிழனின் பண்பை, கற்பை, வீரத்தை, மானத்தைக் காப்பது தான் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

பரந்த இப்பூமியின் கண்ணே தமிழன் இல்லாதஇடம் இல்லையென்றே சொல்ல லாம். அப்படிப்பட்ட ஈழத்தமிழனுக்கு இன்று ஒரு நாடு இல்லை. இந்தப் பாரமான நிகழ்வுகளைச் சுமந்துவந்த நாங்களே எங்கள் குழந்தைகளைத் தாய்நாடு அற்றவர் என்று பிறர் சொல்லக் கேட்டும் தாய்மொழி அற்றவர் ஆக்கி வருகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

"மாமியார்வீடு சொர்க்கம்போல்" என்பார்கள். ஆனால் தாய்வீட்டில் உள்ள சுதந்திரம் உண்டோ? இதேநிலையில்தான் சிலர் சில சில்லறைச் சுகங்களை அனுபவித்துக் கொண்டு ஐரோப்பாவில் வாழுகின்றார்கள். வந்த பாதையை மறந்து வாழுகின்றார்கள். ஒரு சிறிய நீர்த்துளியைப்பாருங்கள். சூரிய வெப்பத்தால் ஆவியாகிமேலேபோய் முகிலா கின்றது. காற்றினால் அடிபட்டு மீண்டும் அன்னை பூமியையே வந்தடைகின்றது. இதே நிலைதான் ஒருநாள் நமக்கும் ஒரு காலம் வரக்கூடும். சட்டங்கள் ஐரோப்பா வில் இறுக்கப்பட்டு வசதியீனங்கள் தளர்த் தப்பட்டு வந்தேறு குடிகளாகிய நம்மைப் பார்த்துக் கையசைக்கும் போது எங்கே போவோம், எந்தமொழியில் நம்குழந்தைகள் பேசுவார்கள் சிந்தியுங்கள்!.

தொலைக்காட்சியைப் பார்க்கின்றோம்: பத்திரிகை படிக்கின்றோம்: வானெலியில் அன்றாடம் கேட்டுக்கொண்டே இருக்கின் றோம்: அணுஆயுதப் பரீட்சையால் நாட்டுக்கு நாடு மாண்டுமடியும் மக்கள் வெள்ளம் எத்தனை!எத்தனை!! மண்ணோடுமண் ணாக்கப்படும் நாடும் நகரமும் எத்தனை! எத்தனை!! செயற்கையின் திருவிளையாட லையும் மிஞ்சி இயற்கையன்னையின் விளையாட்டால் அண்டவெளிப் பரப்பிலே பஞ்சபூதங்களும் பதுங்கியா கிடக்கின்றன. பூமியிலே பூகம்பம், எரிமலையின் குமுறல், கடலரிப்பு, வாயுதேவனின் சீற்றம் இந்தக் கட்டுக்கடங்காத சீற்றத்தால் கதறியழுது கண்ணீர் விட்டு மாண்டு மடியும் மக்கள் வெள்ளமும் நாடும் நகரமும் எத்தனை! எத்தனை!!

நெஞ்சம் வெதும்பி ததும்புகையில்
அஞ்சேல் என்றே கையணைக்க –அன்னை
மண்ணைத் தவிர வேறு உண்டோ?

ஒவ்வொருவரும் எங்களை நாங்களே தட்டிக் கேட்க வேண்டிய கேள்வி.

யாரும் அறைகூவல் விடாமலே நாமே நடை போடவேண்டிய கட்டம். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை முறியடிக்கவாவது நம் குழந்தைகளிற்குத் தமிழ்மொழி அவசியம்.

அகதியாக நம்மை ஆதரிக்கும் எந்த ஒரு ஐரோப்பிய நாடும் தாய்மொழியைக் கற்கவோ கற்றுக்கொடுக்கவோ தடைபோட்டது கிடையாது.

"காற்றுள்ளபோதே தூற்று என்பார்கள்" தமிழ்மொழியை ஆராய்ந்து கற்ற ஐரோப்பியர் கள் தமிழின்தொன்மையை தமிழின் சிறப்பை கற்றுணர்ந்து அறிந்தார்கள். தமிழ்நூல்களை ஐரோப்பியமொழியில் அச்சுப்படுத்தினார்கள். ஐரோப்பாவைச் சேர்ந்த போப்பையர் என்பவர் திருவாசகத்தின் சிறப்பில் மயங்கி ஒரு தமிழனாகவே சாக விரும்பினார். தமிழ்மொழி யைக் கற்றார். தமிழனாகவே இறந்தார்.

இத்தாலியைச் சேர்ந்த வீரமாமுனிவர் தமிழ் இலக்கணத்தையே விஞ்ஞானமயப்படுத்தி அச்சுவாகனமேற்றப்பாடுபட்டார். ஐரோப்பாவில் வந்துநாம் கல்விகற்று முன்னேற எவ்வளவு பொருட்செலவு, எவ்வளவு வசதியீனங்கள் என்று சிந்தியுங்கள். ஆனால் ஐரோப்பாவில் இருந்தும் விழித்துக்கொண்டே நம் குழந்தைகளை உறங்க வைக்கின்றோம். ஐரோப்பிய அரசு பல இலவச உதவிகளை நமக்குச் செய்தும் இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைகழுவி விடுகின்றோம்.

தாய்மொழியின் துணைகொண்டு எங்கள் குழந்தைகளை விஞ்ஞான மேதைகளாகவும் தொழில்நுட்ப வல்லுனர்களாகவும், பேராசிரியர் களாகவும், ஆராட்சியாளர்களாகவும் ஆக்க அத்திவாரம் இடுங்கள். ஐரோப்பாவில் உள்ள தமிழ் எழுத்தார்களை ஊக்கிவித்து நமது நூல்களை ஐரோப்பியமொழியில் ஆக்குங்கள். ஐரோப்பிய நூல்களை நமது மொழியில் மொழிபெயர்க்க உதவி செய்யுங்கள். இப்படியான ஆக்கங்கள் நம் குழந்தைகளை அறிவுள்ளவர்களாக ஆக்கும். இது உண்மை.

வளர்க தமிழ்.

**எங்கே.................................**

நிழலில்லையேல் வெயிலை குடிப்போம்
என்றனர்
காற்றில்லையேல் புயலை சிறைப்பிடிப்போம்
என்றனர்
நிழலும் இல்லை
காற்றும்.................
எங்கே......................?

**கரவைதாசன்** ................



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

**குறுநாவல் – தொடர்**

②

"டனிஷா" டென்மார்க்கில் பிறந்துவளர்ந்தவள்.
வயது: 16
தனது குடும்பத்துடன் டென்மார்க்கைவிட்டு அவள் மீண்டும் ஈழத்திற்கு புலம்பெயர்கிறாள்.
அங்கு அவள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிக்கூறும் ஒரு குறுநாவல் தொடர்.



பொன்மணி காலைஆகாரத்தயாரிப்பில் மூழ்கியிருந்தாள். குசினிக்கூரையைக்கிளப்பிக்கொண்டு புகை கக்கிக்கொண்டிருந்தது. முற்றத்து பூமரத்தின்கீழ் குழியொன்றினுள் தலைநீட்டிப்படுத்திருக்கும் வெள்ளைநாய் டனிஷாவைக்கண்டு ஒருமுறை கறுவிக்கொண்டது.

டனிஷாவும் அவளின் அம்மாவும் டனிஸ்மொழியில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.தாயார் சுமதியும் இந்த இடம்பெயர்வால் மிகவும் கவலைகொண்டிருந்தாள்.வாழ்க்கை மீண்டும் புதிதாக தொடங்கப்படவேண்டியிருக்கிறதே என்பதிலும், அதற்கான பொருளாதாரத்தினைப் பற்றியும், எல்லாவற்றிற்கும்மேலாக டனிஷாவின் எதிர்காலம் பற்றியதாகவும் சுமதியின் கவலை இருந்தது.வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் பெரும்முதலீட்டோடு வருபவர்கள்தான். ஆனால் டனிஷாவின் குடும்பம் வெறுங்கையோடல்லவா வந்திருக்கிறது. டென்மார்க்கில் ஏற்பட்ட வெளிநாட்டவருக்கெதிரான கிளர்ச்சியின் காரணமாக அல்லவா அவர்கள் இடம்பெயரவேண்டியதாயிற்று.உடுத்த உடைதான். 83 ல் ஸ்ரீலங்காவிலிருந்து வந்தது போலவேதான் இவர்களும்.தலைசீவிக்கொண்டிருந்த சுமதியின் கை சீப்போடு தலையிலேயே நின்றது.

படலையைத்திறந்துகொண்டு அந்தக்கிழவி வந்துகொண்டிருந்தாள். பொக்குவாய்க்குள் குதப்பிக்கொண்டுவந்த பாக்குவெற்றிலைச்சக்கையை வேலியோரமாகத்துப்பிவிட்டு வந்தாள். அவள் ஒரு வெள்ளைச்சேலை அணிந்திருந்தாள். வழமையாக அவள் மேச்சட்டை அணிவதில்லை. மெலிந்து விறைத்த தோற்றம். உழைப்பிலும், வயோதிபத்திலும் கறுத்துச்சுரு



படிப்பகம்

www.padippakam.com

ங்கிப்போன தோலுடனான உடல்வாகு.மார்புப் பகுதியை லாவகமாக மூடிக்கொண்டு பின்கொண்டுசென்று இழுத்துச்சொருகிய முந்தானை."நாமுத்தன்பொஞ்சாதி" என ஊரில் அழைக்கப்படும் இவளின் உண்மைப்பெயர் யாருக்கும் தெரியாது. நன்றாக எண்ணை தேய்த்து இழுத்துப்பின்புறமாக போட்டிருக்கும் அவளின் பனங்காய்ப் பணியாரமளவு குடுமி. ஊரில் நடக்கும் சேதிகளை சேகரித்துவைத்தும், ஊரூராய் எடுத்துத்திரிந்தும், சம்பவம் நடக்கும் இடங்களுக்கு உடனேயே பிரசன்னமாகிவிடும் இவள் ஒரு நடமாடும் பத்திரிகை. ஊர்க்கமக்காரருக்கு வயல்களத்தில் சமையல் வேலைகளிலும், இதனால் களப்பிச்சை வழங்குவதில் இவளிடம் கமக்காரர் காட்டும் தாராளநெல்லுதவியும்தான் இவளின் சீவியம்.கோடைகாலங்களில் சிறுகடல் வற்றிப் போகும் நாட்களில் இறால் தடவி விற்றும் சீவனம் நடத்தும் இவள் அந்தக்கிராமத்தின் கைம்பெண். அவளின் வாழ்வு சந்தோசமானது. அவள்தான் இப்போது பொன்மணிவீட்டினுள் வருகின்றாள்.முற்றத்தில் தலைவாரிக்கொண்டு நின்ற சுமதிக்கு அவளை முதலில் அடையாளம் காணமுடியாவிட்டாலும் இப்போது அடையாளம் கண்டுகொண்டாள்.

நவா குடும்பம் வந்தசேதியை கேள்வியுற்று அள்ளிப்பறந்தல்லவோ அவள் ஓடிவந்திருக்கிறாள்.

வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தனது சுகநல விவரங்களை ஆரம்பித்துவிட்டாள் அவள்.

முற்றத்தில் நின்றிருந்த டனிஷாவின் அங்க விவரணப்பேச்சில் கிழவி தொடங்கி ................ கதை நீண்டுகொண்டிருந்தது.

கிழவிக்கு அவிழ்த்துவைக்க நிறைய கதைமூட்டைகள் இருந்தன.

பொன்மணி சமையல் ஆரவாரத்தினுள்ளும் வெற்றிலைத்தட்டை எடுத்துவந்து திண்ணையில் கிழவியைநோக்கி அரக்கிவிட்டுப்போனாள்.

இந்தக் கதைஏதும்விளங்காதுநின்ற டனிஷாவுக்கு அவசரம்.

அவர்களின் கதைக்குக்குறுக்கே......... மன்னிப்புக்கேட்டுக்கொண்டு தனது அவசரத்தை விளக்கினாள் டனிஷா.

சுமதி எழுந்து வந்து கிணற்றடிப்பக்கமாக அவளை அழைத்துச்சென்று காட்டிவிட்டு விளக்கமும் கொடுத்துவிட்டு வந்தாள்.

"என்னமாய் இங்கிலீசு பேசுது புள்ள" என்றாள் கிழவி.சுமதி சிரித்துக்கொண்டே கிழவியுடன் இணைந்துகொண்டாள்.

பின்வளவையும் முன்வளவையும் பிரித்துக்கிடந்த வேலிப்பொட்டினுள்ளால் நுழைந்தாள் டனிஷா.மேலேகிடந்த முட்கம்பி டனிஷாவின் தோள்ச்சட்டையை பிடித்துக்கிழித்துவிட்டது. வாய்க்குள் ஏதோமுணுமுணுத்தபடி கிழிந்த இடத்தைப்பொத்திப்பிடித்தபடி அந்த ஒற்றையடிப்பாதையில் இறங்கினாள்.அன்னமுன்னாமரக்கூடல்களைக்கடந்து கொய்யாமரத்திலிருந்து இறங்கி பயந்தபடி ஓடும் கோழியையும் விலக்கிக்கொண்டு சென்றாள் டனிஷா.

வீட்டுக்கார வெள்ளைநாய் யாரோ கழித்த காலை..............தை ருசிபார்த்துத்தின்றுகொண்டிருந்தது.அதன் அருகிலும் காய்ந்துபோய் கிடந்த ..................க்கண்டு அருவருத்தபடி கால்கள் கூசக்கூச டனிஷா தூரச்சென்றுவிட்டாள்.

வற்றாப்பளைக்கிராமத்தில் காதோடு காதுவைத்தபடி நடந்துமுடிகின்ற காலைக்கடன். இப்போதெல்லாம் கிராமத்தில் கக்கூஸ் பாவனைக்கு வந்துவிட்டாலும் பொன்மணியின் வீட்டுப்பொருளாதாரம் இதற்கு இன்னமும் இடம்கொடுக்கவில்லை.இப்போதும் பின்வளவுப்பற்றைக்காடே இதற்குப்பயன்பட்டு வந்தது.முற்றிலும் புதிய இப்பழக்கத்தை டனிஷாவால் ஜீரணித்துக்கொள்ளமுடியவில்லை. அடிவளவுவரை டனிஷா வந்துவிட்டாள்.

அது ஒரு புற்று.கொஞ்சம் பற்றைமறைவாகவும், கொஞ்சம் வெளியாகவும்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது.டனிஷா குந்திக்கொண்டாள்.முகம் அந்தரத்திலும் அவசரத்திலும் மிரண்டு மிரண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டது.

கொஞ்சநேரம்தான்....

பாம்பு படமெடுத்தபடி முன்னால் நின்றது.

"Slange Slange" (பாம்பு.....பாம்பு...)என அலறியபடியே எப்படி வீட்டுமுற்றத்திற்கு வந்தாளோ தெரியாது.....முகம் வியர்த்திருந்தது. எல்லோரும் வீட்டுமுற்றத்தில் கூடிவிட்டனர். சுமதி டனிஷாவை அழைத்துச்சென்றாள். நாமுத்தன் பெண்சாதிக்கு அடுத்தபடலைக்கு ஒரு நல்ல செய்தி கிடைத்த கொண்டாட்டத்தில் வளவுப்படலையால் வெளியேறினாள்.

∴∴

வீட்டுத்திண்ணையில் நவா இருந்தார். கையில் ஒரு பெட்டி இருந்தது.

ப......ப....பா...பா.....என்று பொன்மணி கோழிகளை அழைத்தாள். வீட்டுவளவெங்கும் சிதறிப்போய் இரைதேடிக்கொண்டிருந்த கோழிகள் எல்லாம் கேரிச்சப்தமிட்டுக்கொண்டும், சிறகுகளை அடித்துக்கொண்டும் முற்றத்திற்கு ஓடிவந்தன. நவா தனது கையிலிருந்த பெட்டியிலிருந்து நெற்களை எடுத்து முற்றத்தில் வீசினார்.பொன்மணி பிழிந்ததேங்காய்ப்பூக்களை முற்றத்தில் தூவிவிட்டு கறுப்பாகவும், நல்லவீரியமாகவும் உயர்ந்தும் நின்ற ஒரு கறுப்புச்சேவலைக்காட்டி பிடிக்கும்படிசொன்னாள்.

கறுப்புச்சேவல் மிரண்டுமிரண்டு நவாவைப் பார்த்தது.பாகத்தே கிடந்த கொட்டனொன்றுடன் மத்தியானக்கோழிக் கறியை நினைத்தபடி எழுந்தார் நவா.

கொட்டனை விட்டெறிய அச்சமாக இருந்தது. மற்றக்கோழிகளைத் தவிர்த்து குறிவைப்பதும் கடினம்.இந்தஆவலுக்குள் வீட்டு வெள்ளை நாய் ஓடிவந்து குழப்பிவைத்தது.கோழிகள் சிதறி ஓடின. நவா துரத்தத்தொடங்கினார்.

உயர்ந்தும் இறுக்கமாகவும் கிடந்த வேலிகளைக்கடக்காமல் உள்வீட்டுக்குள்ளேயே சேவல் ஓடியது நவத்தாருக்கு சாதகமாக இருந்தது. இரண்டு மூன்று எறிகள் தவறிவிட்டன.நவா கோழியை கலைத்துக்கொண்டே இருந்தார். கிராமங்களில் இது ஒரு சுவாரசியமான விடையம்.கோழியை கலைத்துப்பிடிக்கும்போதே மத்தியான கோழிக்கறி வாசனை வீடெங்கும் பரவியிருக்கும். அணில்கள் பலத்துக்கூச்சலிட்டன.சேவலும் ஓடி.....நவாவும் கலைத்து ....... சேவலைவிட நவா நன்றாக களைத்துவிட்டார். நெய்க்கோழிகள் விரைவில் களைத்துவிடும். பிடிப்பதற்கு அதிகப்பிரயத்தனம் தேவையில்லை. ஆனால் இங்கு களைத்துப்போனது நவாவேதான். முயற்ச்சி தளராத நவா இப்போது கோழியின்பின்னால் கிணற்றைச் சுற்றிக்கொண்டிருந்தார்.

அந்த கறுப்புச்சேவலின் அபாயக்குரலுக்கு வீட்டு வெள்ளைநாய் ஓடிவந்து சேவலுடன் இணைந்துகொண்டது. முதலில் சேவலைகலைத்த நாய் ஏதோ திடீரென நவாவைநோக்கி பாய்ந்தது. எதிர்பாராத நவா சற்றுப்பின்வாங்கி கையிலிருந்த கொட்டனால் நாயை எறிந்தார்.

இந்த ஆரவாரத்தினுள் அர்ச்சுனன் அடுக்களைக்குள் நுழைந்தான்.

முற்றத்துக் குடத்தடி வாழையில் அவனது ஊன்றுகோல் சாத்தியபடி கிடந்தது.

"யாரோ இராத்திரியும் தோட்டத்துக்க கள்ளத்தேங்காய் பிடுங்கிப்போட்டாங்கள்" .......எனக்கூறியபடி திண்ணையில் குந்தியவனின் முன்னால் ஆவிபறக்கும் புட்டும், முதல்நாள் குளம்பும், சம்பலுடனும் சாப்பாட்டை வைத்து நிமிர்ந்தாள் பொன்மணி.

குளைத்தெடுத்த முதற்கவளம் கையில் இருக்க அர்ச்சுனன் தாயாரைக்கேட்டான்.

"அம்மா.......என்ன... மாமா கோழி கலைக்கிறார் டென்மார்க்கில இருக்கேக்க ஏதும் தீனிபோட்டவராமோ.......பெரிசாய் தின்னவந்திட்டார்........... ரோசம்கெட்டதுகள்....."

பொன்மணியின் முகம் மாறிக்கறுத்தது.

.......தொடரும்......



படிப்பகம்

www.padippakam.com

காகம்

அடுத்தஇதழில்

..........................................................

H.C.Andersen கதை

..........................................................

ஆதவனின்பார்வையில் சினிமா

..........................................................

கிணறு–சிறுகதை

..........................................................

மனதோடு பேசுதல்– கவிதை

..........................................................

மலர்தல் வாடல் தெரிதல்–அனுபவம்

..........................................................

தோப்புக்காணங்கள் – குறுநாவல்

..........................................................

தாய்மொழி....தமிழா? –கட்டுரை

..........................................................

யெனீவாவில் நான். –கட்டுரை

..........................................................

பிரச்சினை......"கூட்டுக்குடும்பம்"

..........................................................

இளைஞர்பக்கம்

..........................................................

மேலைத்தேய சுதந்திரத்தினுள்தமிழ்மாணவர்கள்

..........................................................

கவிதைகள்

..........................................................

மற்றும் பல.........................................

..................................................................................

உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லோரும் வளர......

காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.*

*– ஒரு தாய்*

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 2 – மாசி. 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark.
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி

..........................................................................................

சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்கங்களை படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.

.........................காகம்.........................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Til: Chanchive
Danmarksgade 10
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்